# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 61 மலர் : 11

**உள்ளுறை** | பக்கம்


1. நற்றத்தனார் யாப்பு .... 481
2. தென்கிழக்கு ஆசியநாடுகளில் குமரிக் கண்டத்தின் சான்றுகள் .... 487
3. ஆண்ட தமிழகம் .... 491
4. திருக்குறள் தேசிய நூற் கருத்தரங்கு .... 492
5. மணிக்கொடி இயக்கமும் தமிழ் சிறு கதைகளும் .... 495
6. மாமூலனார் காலம்—ஒரு வரலாற்று ஒப்பாய்வு .... 500
7. கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு .... 525



ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்
பேராசிரியர் க. வெள்ளைவாரணன், சிதம்பரம்
சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி, பி. எல்.,
இயக்குநர், தமிழ்வளர்ச்சித் துறை சென்னை.
டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம்.
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.
பேராசிரியர் பீ. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி
பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.
புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம் ஃபில்.,
துணை முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி,
புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி
திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி.

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு — ~~2018~~ 2019

துணர்: 61 பிரபவ — மாசி மலர் : 11

பிப்பிரவரி — மார்ச்சு — 1988

## நற்றத்தனார் யாப்பு

இராம. இராமமூர்த்தி,
ஆய்வுமாணாக்கர்,
திருநள்ளாறு.

தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிய யாப்பிலக்கண நூல்கள் பல. அவற்றுள் யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையுமே இன்று சிறப்புப்பெற்று விளங்குகின்றன. யாப்பருங்கல விருத்தியுரையின் வாயிலாக அவிநயம், காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம், பல்காயம், மயேச்சுரர் யாப்பு, நற்றத்தம், சங்க யாப்பு முதலிய யாப்பிலக்கண நூல்கள் சுட்டப் படுகின்றன.

இவையேயன்றி, நூலாசிரியர் பெயர் அறியவாரா யாப்பு நூற்பாக்களும் விருத்தியுரைகாரரால் காட்டப் பட்டுள்ளன. இக்கட்டுரையில் நற்றத்தனார் தரும் யாப்பியற் செய்திகள் மட்டுமே நோக்கப்பட்டு, அதன் வாயிலாக நற்றத்தனாரின் யாப்பியற் சிந்தனைகள் (school of thought) விளக்கப்படுகின்றன.

நற்றத்தனார் செய்த யாப்புநூல் நற்றத்தம் எனப்படுகிறது. அபிதான சிந்தாமணியாசிரியர், இவரை அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர் எனக்குறித்துள்ளார். இலக்கிய வரலாற்று நூல்களுள் இவரைப் பற்றிய விரிவான குறிப்புகள் கிடைக்கவில்லை. இவரது காலம் யாப்பருங்கலத்திற்கு முற்பட்டதாகலாம். காக்கை பாடினியார் காலத்தவராகலாம் எனச்சிலர்கருதுவர்.

நற்றத்தனார் யாப்பு நூற்பாக்களாக, யாப்பருங்கல விருத்தி யாப்பருங்கலக் காரிகை, காக்கை பாடினியம் போன்ற நூல்களிலிருந்து கிடைத்துள்ள நூற்பாக்கள் இருபத்தெட்டு. அவற்றுள் ஒன்று வெண்பா யாப்பானியன்றது. ஏனையவை நூற்பா யாப்பான் இயன்றவை. இதனை நோக்க, இவ்வாசிரியர் மேலும் பல நூற்பாக்களை வெண்பாயாப்பானியற்றி யிருக்கலாமென எண்ண வாய்ப்பளிக்கின்றது.

இனி, இந்நூலாசிரியர் நுவலும் யாப்பியற் செய்திகளைக் காண்போம். தூக்கும் தொடையும் அடியும் இம்மூன்றையும் நோக்கியதே யாப்பென இலக்கணம் வகுக்கின்றார். பிறயாப்பாசிரியர்களைப் போல எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற உறுப்புகளையும், பாவினங்களையும் விரித்துக் கூறவில்லை இஃது,

'.......... அடியாப் பெனாஅ,
மரபே தூக்கே தொடைவகை எனாஅ,

என வருஞ்செய்யுளியலைப் பின்பற்றியுள்ளதை யறியலாம். பின்னர்ப் 'பாவொடு மொழியினும் தூக்கினது பெயரே' எனத் தூக்கின் வேறு பெயரைக் குறித்துள்ளார். நேரசை, நிரையசை யென இருவகை அசைகளையும், அவற்றிற்குரிய இலக்கணங்களையும் சுட்டியுள்ளார். ஆனால், தொல்காப்பியர் சுட்டும் உரியசையை இவர் குறிக்கவில்லை. ஆயினும், [1] வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச் சீரைக் குறிக்குமிடத்து, நேர்பு, நிரைபு என்னும் உரியசையை உடன்படுகின்றார். இக்கருத்தை யாப்பருங்கலம், காரிகை யாசிரியர்கள் ஏற்றுக்கொண்டு தெளிவாகச் சுட்டியுள்ளார்.

அளபெடை சீர்நிலை பெறுதலைக்குறிக்குமிடத்துத் [1]தனிநிலை அளபெடையை நேர்நேராகவும் அலகிட வேண்டுமென இலக்கணம் வகுத்துள்ளார்,

அடுத்து, இந்நூலாசிரியர் சீரின் வகைகளையோ தளை கொள்வது பற்றியே யாண்டும் விளங்கவுரைத்தாரிலர். அது போலவே அடிகளின் வகைகளைச் சுட்டும் நூற்பாக்களும் கிடைத்தில.

தொடை வகைகளைச் சுட்டும் நூற்பாக்களாக எட்டு நூற்பாக்கள் கிடைத்துள்ளன. மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, செந்தொடை, இரட்டை, அந்தாதி என எட்டுவகைத் தொடைகட்குரிய இலக்கணங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும், மோனை, எதுகைத் தொடைகட்குக் கிளையெழுத்துகளும் உள்ளன என்றும், முதற்சீரின் அமைப்பைக் கொண்டே தொடை விகற்பம் கொள்ளப் பெறும் எனவும் வகுத்துரைக்கின்றார். இவர் தொடை கொள்ளும் முறை [3]தொல்காப்பியத்தைப் பின்பற்றியது. ஆனால் இந்நூலினது வளர்ச்சிமுறையைப் பிற்கால யாப்பு நூல்களில் நன்குணரலாம்.

இனி இவ்வாசிரியர் கூறும் பாவகைகளையும், அவற்றிற்காம் இலக்கணங்களையும் காண்பாம். ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என நால்வகைப்பாக்களையுங் கூறியுள்ளார். மருட்பா பற்றிய குறிப்பினைக் கிடைத்துள்ள நூற்பாக்களைக் கொண்டு அறியக்கூடவில்லை.

ஆசிரியப்பா நேரடியான் நடைபெறுமெனவும், சிற்றெல்லை மூவடியெனவும், பேரெல்லை ஆயிரம் அடியெனவும் கூறப் பட்டுள்ளது. ஆனால் ஆசிரியப்பாவின் வகைகளும், அப்பா இறுமாறும் சுட்டும் நூற்பாக்கள் கிடைத்தில,

வெண்பா அளவடியான் நடைபெறும் ; ஈற்றடியின் ஈற்றுச் சீர், நேரீற்றியற்சீராகவரினும் உரியசையாகக் கொள்ளப்படும் ; ஐஞ்சீராக வருதலும் மண்டில யாப்பாதலும் வெண்பாவிற்குரியன வல்ல ; இப்பாவின் சிற்றெல்லை ஈரடி. பேரெல்லை ஏழடி[4] என இலக்கணங் கூறப்பட்டுள்ளது. வெண்பாவின் வகைகள் பற்றியும் ஓசை பற்றியும், தளை பற்றியும் குறிப்புகள் கிடைக்கவில்லை.

ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பா, கொச்சகக்கலி எனக் கலிப்பாவின் வகைகள் சுட்டப்பெறுகின்றன. ஆனால், தொல்காப்பியர், ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக்

கலி உறழ்கலி எனக்கலிப்பாவின் வகையினை நான்காக்குவர். கலிப்பாவும் நேரடியால் நடைபெறும் எனச்சுட்டியுள்ளார். பிற கலிப்பாவகைகள் சுட்டப்பட்டதற்கான குறிப்புகள் இல்லை.

இந்நூலாசிரியர் வஞ்சிப்பாவினைக் குறித்துக் கூறும் நூற்பாக்கள் கிடைத்தில. கூனைப் பற்றிக் கூறுமிடத்து, 'வெஞ்சி யிறுதியும் வரையார் என்ப', எண்ணும் நூற்பாவில் வஞ்சிப்பா குறிக்கப் பட்டுள்ளது. பிற செய்திகள் யாவையுங் கிடைத்தில. வகையுளி பற்றியும் ஒரு நூற்பா கிடைத்துள்ளது.

நற்றத்தனார், வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை, அங்கதம், கலியியற்பாட்டு, ஆகிய இவையிற்றிற்கான அளவு பாடுவோன் உளக்குறிப்பே எனச் சுட்டியுள்ளார். பிற யாப்பாசிரியர்கள்-குறிப்பாக யாப்பருங்கலக் காரிகையார், வாயுறை வாழ்த்தையும், செவியறிவுறூஉவையும், கைக்கிளையையும் மருட்பாவில் அடக்குவர். இதற்குக் காரணியம், தொல்காப்பியர்,[5] ''வெண்பா வியலினும் ஆசிரிய இயலினும், பண்புற முடியும் பாவின வென்ப'' என வரைந்த நூற்பாவேயாகும். அங்கதம்பற்றித் தொல்காப்பியர்க்குப் பின்வந்த யாப்பாசிரியர்கள் சுட்டாது போகவும், நற்றத்தனார் அதற்கு அளவுவரையறை செய்துள்ளமையை நோக்க, அங்கதம் பற்றி மேலும் பல நூற்பாக்கள் இவரால் செய்யப்பட்டிருக்கலாமென எண்ண இடமளிக்கிறது.

இறுதியாக அடிவரையின்றி வரும் உரை, நூல், வாய்மொழி, பிசி, முதுமொழி என்னும் ஐந்துவகையமைப்புகளை இரண்டு நூற்பாக்களிற் றொகுத்துச் சுட்டியுள்ளார். இதனையே, நூலினான வுரையினான, நொடியொடு புணர்ந்த பிசியி னான, ஏது நுதலிய முதுமொழியான, மறைமொழி கிளந்த மந்திரத்தான, கூற்றிடை வைத்த குறிப்பினான' எனத் தொல்காப்பியம் வகுத்துரைக்கும் நற்றத்தனார், தொல்காப்பியர் கூறிய ''மறைமொழி கிளந்த மந்திரம்' ஒன்றை மட்டுமே கூறவில்லை. இவையே, நற்றத்தனார் நூற்பாக்களினின்றும் திரட்டப்பட்ட செய்திகள்.

இச் செய்திகளின் அடிப்படையில், நற்றத்தனார் கோட்பாட்டைச் சுருங்கவுரைப்பாம். இந்நூலாசிரியர் நூற்பா யாப்பையும், வெண்பா யாப்பையும் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியச் செய்யுளியலை யொட்டித் தூக்கு, தொடை, அடி என்ற மூன்றான் யாப்பமைக்கின்றார். நாலசைச்சீரை இவர் கொண்டாரிலர். தளைபற்றிய இலக்கணம் விதந்து கூறப்பட

வில்லை. தொடையும், தொடை விகற்பங்களும் செய்யுளியலையே அடியொற்றியுள்ளன. கலிப்பாவின் வகைகள், வாயுறைவாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை, அங்கதம், கலியியற் பாட்டு, அடிவரையின்றி வருஉம் உரை, நூல், பிசி, வாய்மொழி, முதுமொழி ஆகியன பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தை முற்றிலுஞ் சார்ந்துள்ளன. பல நூற்பாக்களைப் பார்க்குமிடத்து, மொழி பொருளேயன்றி, அவர் தம் மொழியையும் பொன்னேபோற் போற்றியுள்ளமை தெள்ளிதிற் புலனாம்.

ஆகவே. நற்றத்தர்யாப்பு, தொல்காப்பியச் செய்யுளியலின் வழிநூலே எனவுறுதியாகக் கூறலாம். இவ்வாசிரியர் கூறுந் தொடை வகைகள், வெண்பாவின் இறுதிச்சீர் 'உரியசை'யாதல் போன்ற கோட்பாடுகள் யாப்பருங்கலத்தாலும், காரிகையாலும் முழுமை யாகப் போற்றப்பட்டுள்ளன. இதனை யெண்ண, நற்றத்தனார் யாப்பு, தொல்காப்பியத்திற்கும், பின்னெழுந்த யாப்பு நூல்கட்கும் ஓர் இணைப்புப் பாலமாக விளங்குகின்றதெனலாம்.

மேலும் இந்நூலின் நூற்பாக்கள் கிடைக்கப்பெறின், இவரது கோட்பாட்டை அது மேலும் உறுதிப்படுத்தும். நன்கு விளங்கச் செய்யும்.

## குறியீட்டெண் விளக்கம்

1. "சீரா கிடனும் உரியசையுடைய ;
   நேரீற் றியற்சீர் அவ்வயி னான".

2. "தனிநிலை யளபெடை நேர்நேர் இயற்றே
   இறுதிநிலை யளபெடை நிரைநேர் இயற்றே".

3. "அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை."
   "அஃதொழித் தொன்றின் எதுகை யாகும்."
   "ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய"
   —தொல்-பொருள்-404, 405, 406.

4. "ஏழடி இறுதி ஈரடி முதலா
   ஏறிய வெள்ளைக் கியைந்தன அடியே."
   —சங்க யாப்பு.

5. அ) "புறநிலை வாயுறை செவியறி வுறூஉவென
   திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்

வெண்பா வியலினும் ஆசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின வென்ப."
—தொல்-பொருள்-478

ஆ) "கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே."
—தொல்-பொருள்-481.

**மேற்கோள் நூல்கள் :**


1. ......" தொல்காப்பியம், பொருளதிகாரம்-பேராசிரியம்", கழகம், சென்னை, 1972.

2. வேணுகோபாலப்பிள்ளை, மே. வீ. (பதி), 'யாப்பருங்கலம்,' The Curator, Govt. Oriental Manuscripts Library, Madras, 1960.

3. வேங்கடசாமி நாட்டார், ந. மு. (பதி), 'யாப்பருங்கலக் காரிகை,' கழகம் சென்னை, 1959.

4 இளங்குமரன், புலவர் இரா. (உ. ஆ.), 'காக்கை பாடினியம்,' கழகம், சென்னை, 1974.

5. சிங்காரவேலு முதலியார், ஆ., 'அபிதான சிந்தாமணி,' Asian Educational Services, New Delhi, 1986.


---

# தென்கிழக்கு ஆசியநாடுகளில் குமரிக் கண்டத்தின் சான்றுகள்

சாத்தூர்சேகரன்,
12, முக்கிய சாலை,
சாத்தூர் - 626203.

இலெமூரியக் கண்டக் கோட்பாடு உண்மைதான் என்ற போதிலும் அது நிகழ்ந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்ட படியால் பொதுவான சில அம்சங்களை மட்டுமே தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நிலப்பரப்புகளில் பார்க்க முடிகிறது. ஆனால், ஆய்வாளர்கள் கூற்றுப்படி குமரிக்கண்டக் கோட்பாடு ஏறத்தாழ 40,000 ஆண்டு களுக்கு முன்புதான் நேர்ந்திருக்க முடியும். அதனால், பல பொது அம்சங்கள் இன்றும் சேதமுறாமல் இருக்கக் காண்கிறோம் அண்மையிலான எனது தென்கிழக்கு ஆசிய நாடுகளிலான சுற்றுப் பயணம் பல ஒப்பற்ற சான்றுகளைத் தந்துள்ளன.

தாய்லாந்து, வியட்நாம் காம்போடியா மலேயா மற்றும் இந்தோனேசியா நாடுகளின் உருவ அமைப்பு — கண், மூக்கு வாய், உதடு, போன்ற அனைத்துக் கூறுபாடுகளிலும் அவர்கள் தென்னிந்தியரையே ஒத்துள்ளனர். சீனரின் இடுங்கிய கண்ணோ, நம்மினும் சப்பை மூக்கையோ காண இயலவில்லை.

தாய்லாந்து, வியட்நாம், காம்போடியா, மலேயா மக்களின் நிறம், தென்னிந்தியரின் சராசரி நிறத்திற்குச் சிறிதளவே கூடுதல் மஞ்சளாக உள்ளது. இஃது இயற்கையின் அருளாகும். ஆண்டில் எட்டுத்திங்கள் ஓயாத மழையும், நான்கே மாதம் நம்மினும் குறைவான வெயிலும் உள்ளதால் அவர்கள் வெயிலால் வறுக்கப்படவில்லை ; ஒறுக்கப்படவில்லை ; கருக்கப்படவில்லை. இவ்வாறான சூழல் இருப்பினும் இந்தோனேசிய மக்கள் குறிப் பாக ஜாவா சுமத்திரா தீவில் உள்ளோர் நம் போன்றே உள்ளனர். நம்மிலும் கருப்பாகவும் சிலர் உள்ளனர்.

ஆடை அணிகலன்களிலும் தென்னிந்தியராகவே உள்ளனர். மூதாட்டிகள் முண்டும் துண்டுமாக (கேரளா போன்று) உள்ளனர். முதுமூதாட்டிகள் (70 வயதுள்ளோர்) முண்டு மட்டுமே கட்டி மேலே ஆடையின்றி உள்ளனர். அண்மைக்காலம் வரை கேரளத்தில் முதுமூதாட்டியர் இவ்வாறு இருந்தமையைப் பலரும் அறிவர். வறுமை ஒரு காரணமாயினும் பழக்க வழக்கமும் ஒரு காரணம் ஆகும்.

கையில் வளையல் அணிவதும், கழுத்தில் சங்கிலி பூணுவதும், கூந்தலில் மலர் சூடுவதும் ஆகிய தென்னிந்திய முறைமையே இங்குச் சிறந்து விளங்குகிறது. மலாக்கா (மலேசிய மாநிலம்) இசுலாமியப் பகுதி ஆனபோதிலும் பெண்கள் பொட்டு அணிகின்றனர். தாலி கட்டிக் கொள்கின்றனர். பர்தா முறை கிடையாது தலையில் ஒரு சிறு கைக்குட்டையைக் கட்டிக்கொள் கின்றனர். இந்தோனேசியாவில் இதுவுமில்லை. அவர்கள் மதச் சார்பற்றவர்கள் இசுலாமைப் பின் தொடர்பவர்களும்-தம்மை அறிவு சார்ந்த இசுலாமைப் சார்ந்தவர் என்கின்றனர். எனவே, தம்மை அறிவு உலகச் சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டதுடன் பிற மதங்களை மதித்திடும் சால்பு பெற்றோராயும் உள்ளனர்.

உணவுப்பொருள்களைப் பொருத்த மட்டிலும் பெருத்த ஒற்றுமையே உள்ளது. நம்மைப்போலவே அரிசியையே மூல உணவாகக் கொள்கின்றனர். நமது இரசமும் சாம்பாரும் கலந்தால் எப்படி இருக்குமோ அவ்வாறான நீர்த்த குழம்பையே ஊற்றிச் சாப்பிடுகின்றனர். இறைச்சியுண்போர் குழம்பில் உள்ள காய்கறித் துண்டங்களுக்குப்பதில் இறைச்சித் துண்டங்களைப் போட்டுக் குழப்பு தயார் செய்கின்றனர். நமது தின்பண்டங்களான முறுக்கு, வடை, சுழியம், அப்பம், ஆப்பம், **நாங்கிள் வேகவைத்த வழைப்பழம்** ? (மலையாள பிழிஞ பழம்), இனிப்பு உருண்டைகள் ஆகியன அனைத்தும் அங்கு கிடைத்திருக்கின்றன.

சமயத்துறையை எடுத்துக் கொண்டாற் கூட பழைய இந்து சமயமே இங்கு அடித்தளமாக நின்று நிலவிவருகிறது. சூன்ய இந்துமதம் என்று இதனைக் கூறலாம். விஷ்ணு பிரம்மா சிவன் இந்த இந்தத் திசையில் இருப்பதாகக் கற்பித்துக் கொண்டு படையல் செய்கின்றனர். கொற்றவைக்கு நமது காளிக்கு நாம் படைப்பது போலக் கள்ளையும் சாராயத்தையும் படைக்கின்றனர் என்பதைப் பார்க்கும் போது நமது உள்ளம் கழிபேருவகை கொள் கிறது. வழிபாட்டிற்குத் திராவிட முறையான பூ, இலை, பழம், நீர், பால் தவிரப் பிறவற்றைப் பயன்படுத்துவதில்லை. ஊதுபத்தி, சாம்பிராணி, சூடம் ஆகிய பழக்கம் உண்டு. யாகம் போன்றவை எங்குமே கிடையாது, எப்போதும் கிடையாது. எனவே, சமயம் முழுக்க முழுக்கத் திராவிடருடையது எனலாம். குமரிக்கண்ட முறையைக் கொள்கைபிறழாமல் கையாண்டு வருகின்றனர். எனலாம்.

இடைக்காலத்தில் வங்காளத்திலிருந்து வந்திருந்த சில பண்டிதர்களால் சாதி முறை ஏற்படும் நிலை உருவாயிற்று ஆனால்,

குமரிக்கண்ட கோட்பாடான சாதியற்ற சமுதாயம் இன்று பலநாடு களிலும் இருக்கக் காண்கிறேன். முழுக்க முழுக்க இந்துக்கள் (25 இலட்சம் பேர்) வாழும் பாலித் தீவிலும் இந்நிலை என்னும் போது தொழிற்சாதி மட்டுமே உள்ளபோது அவர்கள் தென்னிந்தி யரின் மக்களாய் இருந்தபோதிலும், அவர்களிடமிருந்து நாம் கற்பதற்குப் பல உண்டு என்ற எண்ணமே உண்டாகிறது.

நெற்றியில் சந்தனக் கீற்று இட்டு அதில் செந்திருக்கப் பொட்டு இட்டவர்களைக் காணும்போது இதயம் சங்ககாலத்தையும் தாண்டிக் குமரிக்கண்ட காலத்திற்கே ஓடிச்செல்கிறது. பெண்கள் கருநிறப் பொட்டு வைத்து உலாவும்போது - ஐயாயிரம் கல்களுக்கு அப்பாலும் தமிழர்களை- தென்னிந்தியர்களைக் காண்பதாக நினைக்கத்தோன்றுகிறது.

தாய்லாந்தின் சமயம் பௌத்தம். ஆனால், புத்தமதவாதிகள் அரசியலில் ஈடுபடத் தடை உண்டு. அரசன் இந்துசமயச் சார்பானவன் என்பது மட்டுமல்ல — ராமா (இராமன்) என்ற பட்டம் சூட்டிக் கொள்கின்றனர். சுழலும் கரன் (வாளுடைய கையன் என்பது துணைப்பட்டம்! தமிழ் எங்கெல்லாம் துள்ளித் திரிகிறது பாருங்கள். அரசன் ஒரு தமிழ்ப்பரம்பரையில் வந்தவன். பட்டம் சூடும்போதும் சில திருவிழாக்களின் போதும் தேவாரம், திருவாசகம், திருவெம்பாவை போன்றவை பாடப்பெறுகின்றன!

மலேசியாவின் சமயம் இசுலாம். ஆனால், கடுமையான இசுலாம் அல்ல; காலத்திற்கு ஏற்ற இசுலாம் ஆகும். பழமையில் ஆதியில் அவர்கள் இந்துக்களாய் இருந்தவர் — தென்னிந்திய உறவு கொண்டிருந்தவர் என்பதனை இன்றும் அவர்கள் மறப்பதில்லை. ஒரு சுல்தானின் பெயர் **பெருமான் சுல்தான்** இவ்வாறே, பெண்கள் பெயரிலும் தமிழ் உறவாடியே வந்து கொண்டிருக்கிறது.

இப்பகுதி மக்களின் மொழியில் 10% தூயதமிழும் 30% திரிந்ததமிழும் உள்ளன. இன்னும் ஆழமாகப் பார்த்தால் 60%க்கும் மேலான தமிழ்மொழியைக் காண முடியும். இதுகாறும் யாரும் முறையாக ஆராய்ந்ததில்லையே!

சீனமொழியே தமிழ் சார்பானது என்ற உண்மையைச் "செந்தமிழும் சீனமொழியும்" என்ற எனது நூல்விளக்குகிறது. ஜப்பான மொழியில் 400 தமிழ்ச்சொற்கள் உள்ளன என்கிறார் ஓமனே. ஆனால் 1000க்கும் மேற்பட்ட தமிழ்ச்சொற்கள் உள்ளன என்பது என் கணிப்பு. இவ்வாறே தாய்மொழி, மலாய் மொழி, இந்தோனேஷ்ய மொழி ஆகியன யாவும் தமிழின் கிளை மொழிகளே என்பது என் முடிவு. அடுத்து வரும் என் ஆய்வு நூல்கள் இதனை உறுதி செய்யும்! இவை பெரும் போரில் ஈடுபாடுசெய்து மாறி மருவிய பண்பாடுடைய நாடுகள் அல்ல. எனவே இங்கு குமரிக்கண்ட சான்றுகளை இன்றும் காணமுடியும்!

---

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## ஆண்ட தமிழகம்

என். சண்முகம்

7, மேற்குராஜாவீதி ஆலத்தூர், சென்னை 600 016.

போர்க்களத்திலேயே காலங்கழிக்க எண்ணிய அவர்களுக்கு அரண்மனைகள் — மாடமாளிகைகள் எல்லாமே ஆடம்பரப் பொருட்களாகக் காட்சி அளித்தன போலும்,

போதாதற்குத் தம்மைப்பாடிவரும் புலவர்களுக்குப் பரிசுப் பொருள்களாகப் பொன்னும் பொருளும் கொடுத்தால் போதாது என்று நிலப்பரப்புகளையே பரிசுப் பொருள்களாகக் கொடுக்கத் தொடங்கினர். அந்நிலப்பரப்புகளை வைத்துக் கொண்டு புலவர்கள் என்ன செய்வார்கள்? செம்மையாக நிர்வாகம் செய்தார்களா? மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டினார்களா? ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. புலவர்கள் வாழ்நாள் முழுவதும் தங்கள் வயிற்றுப் பாட்டைக் கவனிப்பதிலேயே காலங்கடத்தி முடித்திருப்பார்கள். அதனால் ஒரு அரசனின் நிர்வாகக் கட்டுக்கோப்பில் இருக்க வேண்டிய நாடானது துண்டு துக்காணியாகியது — யாருக்கு யார் கட்டுப்படுவது என்பது இல்லாமல் தமிழகம் சின்னாபின்னமாகியது.

இது மட்டுமல்லாமல் ஒரு நாட்டு நிர்வாகத்திற்குத் தேவையான (சிவில் நிர்வாகத்திற்கு) ஏற்ற — எழுத்து மூலமான சட்ட திட்டங்கள் — இன்று உள்ளவை போல் — அன்றில்லை. பொது மக்கள் பராமரிப்புச் சட்டம் (CIVIL PROCEDURE CODE) குற்றவாளிகள் தண்டனைச் சட்டம் (CRIMINAL PROCEDURE CODE) என்பவை அக்காலத்தில் எழுதப்படவில்லை. அரசனின் விருப்பம்போல் எல்லாம் நடந்தன. நான்கு வருண மக்களுக்கு என வகுக்கப்பட்ட வேத நூல்களின் சாரமே போதும் என்று விட்டு விட்டார்களோ? அதன்படி உயர்ந்த சாதிக்காரன் கூறுவதே உலக வழக்கு என்று விட்டுவிட்டார்களோ? அதனால் சாதாரண மனிதன் அன்றாடம் தன் வாழ்வில் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்க்க முடியாமல் எல்லாம் தலைவிதி என்று கூறி ஒதுங்கத் தொடங்கிவிட்டான் போலும். அதுவே சமூகப் பிளவுக்கும் — சாதிப் பிளவுக்கும் வழி வகுத்துவிட்டது.

ஓயாத போர்களினால் ஏராளமான ஆண்கள் மரணப் படுக்கையில் வீழ்ந்து விட்டனர். பெண்களும் குழந்தைகளும் அனாதைகள் ஆயினர். கல்வி அறிவுக்கு வழிவகுப்படவில்லை. வெறும் வீட்டுப்பற்றும் நாட்டுப்பற்றும் என்ன செய்யமுடியும்? பாதுகாக்கும் படைபலம் இல்லாமல் அநாதையால் என்ன செய்ய முடியும்? வாழவேண்டிய சமுதாயம் — நாடு — மக்கள் எல்லாமே அழிவுப்பாதையில் போக நேரிட்டது. பாதுகாப்பற்ற நாட்டினில் அன்னியர் தங்குதடையின்றி நுழைந்துவிட்டனர்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வீழ்ந்துவிட்ட தமிழகம் தமிழ்நாடு — தமிழ்மக்கள் இன்றுவரை தலைதூக்க முடியாமலே ஆகிவிட்டது.

# திருக்குறள் தேசிய நூற் கருத்தரங்கு

டாக்டர் ஆறு. அழகப்பன்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை திருக்குறள் தேசிய நூற் கருத்தரங்கினை 18—1—88, 19—1—88 ஆகிய இரு நாள்களில் பல்கலைக் கழக மானியக் குழு, சென்னை, மதுரை, பாரதியார், பாரதிதாசன், தமிழ், பல்கலைக் கழகங்களின் உதவியோடு நடத்தியது. அயல் மாநிலங்களிலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் பேராசிரியப் பெருமக்களும் அறிஞர்களும் கலந்து கொண்டனர். தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் தம் வரவேற்புரையில் கருத்தரங்கின் இன்றியமையாமை யையும் இப் பல்கலைக் கழகம் நடத்துவதின் பொருத்தத்தையும் விளக்கி அரங்கிற்குத் தலைமையேற்ற பெரியார்களையும் பங்கு பெற்ற ஆய்வாளர்களையும் பிறரையும் வரவேற்றார். பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர் இரா. சேதுநாராயணன் அவர்கள் தம் தலைமையுரையில் திருக்குறள் எல்லாக்காலத்துக்கும் எல்லாச் சமயத்தினர்க்கும் எல்லா நாட்டினர்க்கும் எல்லா இனத்தினர்க்கும் ஏற்ப அமைந்திருப்பது தமிழுக்கு வாய்த்த பெருமையாகும் உலகு தழுவிய நோக்கில் பல்வேறு கொள்கைகளை ஆராய்ந்து நல்லன ஏற்று அல்லன நீக்கித் திருவள்ளுவர் தம் குறளைப் படைத்திருத்தலின் அது தேசிய நூலாதற்கு முற்றிலும் தகுதியுடையது. இக் கருத்தரங்கக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் வெளியிட்டு எல்லா நாட்டினரும் பயனடையச் செய்ய வேண்டும் என்று கூறிப்பின் திருக்குறள் பற்றிய பல்வேறு நூற் காட்சியைத் திறந்து வைத்தார்கள். முன்னாள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தம் முதன்மை உரையில் அரசியல் அமைப்பின் விதிமுறைகளுக்கேற்பத் திருக்குறள் பொருந்திவருதலையும் மேலுலக வாழ்க்கைகளையும், வீடு பேற்றின்பத்தையும், பலவகைச் சடங்குகளையும் வற்புறுத்தும் சமய நூல்கள் போலன்றித் திருக்குறள் சமுதாய முன்னேற்றத்துக்கு வழிவகுத்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் நடைமுறைகளைக் காட்டுகிறது என்பதனையும் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தம் வாழ்த்துரையில் ஒரு நாட்டு மக்களை ஒரு குடைக்கீழ்க் கொண்டு வரவேண்டு மெனில் நாட்டு ஒருமைப்பாட்டுக்குத் தேவையான நெறிமுறை களைக் காட்டும் தேசிய இலக்கியம் வேண்டும் என்று டாக்டர் சார்லைல் கூறியதை மேற்கோளாகக் காட்டி அத்தகுதி பெற்றது திருக்குறள் ஆதலின் அது தேசிய நூல் அதற்கு முற்றும் தகுதி வாய்ந்தது என்பதனை நினைவுபடுத்தி மேலும் பல காரணங்காட்டி

அக்கருத்தை வலியுறுத்தினார்கள். ஒவ்வொரு மாநிலமும் இக் கருத்தை வலியுறுத்தும் வகையில் கருத்தரங்கு அமைக்கும் முயற்சியை மேற்கொள்ளத் தூண்ட வேண்டும், அப்பொழுது தான் நாம் நினைத்த குறிக்கோளை அடையமுடியும் என்று கூறி வாழ்த்துரை வழங்கினார்கள். திருக்குறள் இருக்கை சிறப்புநிலைப் பேராசிரியர் டாக்டர் இரா. சாரங்கபாணி நன்றி கூறக் காலை நிகழ்ச்சி நிறைவுற்றது.

மாலை நிகழ்ந்த கருத்தரங்கு முதல் அமர்விற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தெலுங்குப் பேராசிரியர் டாக்டர் சி. ஆர். சர்மா தலைமை ஏற்றுக் குறளின் தனிச் சிறப்பினைத் தெலுங்குமொழியோடும் பிறமொழியோடும் ஒப்பிட்டுவைத்தார். திரு காசிபாண்டியன் ஐ. ஏ. எஸ்., ஐதராபாது, அவர்கள் தம் ஆய்வுக் கட்டுரையில் திருக்குறள் கூறும் வாழ்க்கை நோக்கம் யாது, வாழவேண்டிய நெறிமுறைகள் யாவை, சமுதாய முன்னேற்றத்திற்கு அதுகாட்டும் வழி யாது? என்பவற்றைக் காட்டித் தேசிய நூலாகும் தகுதியைத் தெளிவுபடுத்தினார். திரு கு. ச. ஆனந்தன் அரசியல் அமைப்பு முறைகளும் சமுதாய முன்னேற்ற [நெறிகளும் திருக்குறளில் எங்ஙனம் புலப்படுத்தப் பட்டுள்ளன, அந்நூல் நாட்டு நலத்துக்கு எவ்வெவ் வகையில் துணைபுரியும் என்று தம் ஆய்வுக்கட்டுரையில்விளக்கினார்.[ மதுரை காமராசர் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வுத்துறைப் பேராசிரியர் டாக்டர் த. முருகரத்தினம் இந்திய நோக்கில் புருடார்த்தங்களின் வரலாறு எவ்வெவ்வாறு மாறி வந்துள்ளது என்பதைச் சான்று களுடன் விளக்கினார்.

இரண்டாம் அமர்வுக்கு உலகத் தமிழ்ச் சங்கத் தனி அலுவலர் டாக்டர் ஔவை நடராசன் தலைமை ஏற்றார். திருக்குறள் கவிதைச் சிறப்போடு மட்டும் அமையாது உலகியல் அறங்களை நாடு, சாதி, இன, மொழி வேறுபாடு கடந்து கூறும் திருக்குறட் சிறப்பைப் பாராட்டினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு சட்டம், வேலை வாய்ப்பு, பேச்சுரிமை, சமய வழிபாடு முதலியவை எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்பது அரசியல் சட்டம் வலியுறுத்தும் உரிமைகள். இவை குறளில் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தப்படுகின்றன என்று கூறினார். உசுமானியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் மாணிக்கம் அறியாமையையும் வறுமையையும் போக்க வள்ளுவர் காட்டும் வழிகளை எடுத்துக் காட்டினார். பாரதிதாசன் பல்கலைக் கழக ஆங்கிலப்

பேராசிரியர் கா. செல்லப்பன் திருக்குறள் பொருளாதார வளர்ச்சிக்கும் வாழ்க்கையை இன்பமாக நடத்துவதற்கு சமுதாய நன்மை பெருகுவதற்கும் வழிகாட்டுவது என்பதனைத் தெளிவுபடுத்தினார். டாக்டர் இரா. சாரங்கபாணி தம் கட்டுரையில் சங்க காலக் கொடையறத்தில் திருக்குறள் ஒற்றுமைப்படுதலையும் வேற்றுமைப்படுதலையும் விளக்கிச் சாதிக் கொடுமை கடந்தது திருக்குறள் என்று புலப்படுத்தினார். டாக்டர் மோகனராசு திருக்குறள் ஊனமுற்றோர்க்கு உறுதுணையாக விளங்குதலையும் பெருஞ்செல்வர்க்கு ஒப்புரவு செய்ய அறிவுரை வழங்குதலையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

மூன்றாம் அமர்வுக்குத் தலைமை தாங்கிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் கல்வி கற்கும் முறையை எடுத்துக்காட்டிக் குறளின் தனிச்சிறப்பை விளக்கினார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் க. ப. அறவாணன், அரசியல் நோக்கில் சமூகத் தீமையை அழிக்கக் கொடியவரை அரசு தண்டிக்கலாம் என்றும் இதற்கு இன்னா செய்யாமையை மேற்கொள்ளத் தேவையில்லை என்றும் குறள் காட்டுவதைத் தம் ஆய்வில் தெரிவித்தார். தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறைத் தலைவர் டாக்டர் சோ. ந. கந்தசாமி தம் ஆய்வுக் கட்டுரையில் நாடு பற்றி வள்ளுவர் கூறிய கருத்து எல்லா நாட்டினர்க்கும் பொதுவாக உள்ளது. இந்திய நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஏதாவதொன்றைத் தேசிய உடைமையாக ஏற்க வேண்டும். திருக்குறள் இந்திய மொழிகளிலும் அயல்மொழிகளிலும் அதன் சிறப்புக் கருதி மிகுதியாக மொழி பெயர்க்கப்படுதலின் தேசிய நூலாதற்குத் தகுதி வாய்ந்தது என்பது பெறப்படும் என்று கூறினார். முன்னாள் தலைமைப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் திருக்குறள் நீதிகளை வேறுபாடின்றி எல்லார்க்கும் பொதுவாகக் கூறுகிறது, உலகு என்ற சொல்லைப் பலவிடத்தும் பயன்படுத்தித் தன் உலகந்தழுவிய நோக்கையும் போக்கையும் காட்டுகிறது என்றார். கருத்தரங்கு நிறைவுரையைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நிகழ்த்தினார்கள், கருத்தரங்கில் வினவப்பட்ட ஐயங்களைப் போக்கிச் சிறந்த கருத்துக்களை நினைவு கூர்ந்து விளக்கித் திருக்குறளே தேசிய நூலாதற்கு முற்றும் தகுதி எனக் கூறினார்.

கருத்தரங்கினை வாழ்த்தி மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களும் திருப்பனந்தாள், தருமபுர ஆதீனங்களும் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் மாண்பமை நீதிபதி கே. வீராசாமி அவர்களும் மற்றும் பலரும் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

# மணிக்கொடி இயக்கமும் தமிழ்ச் சிறு கதைகளும்

எஸ். செந்தில்குமார் எம்.ஏ., எம்.ஃபில்.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சாவூர்.

காலந்தோறும் இலக்கிய வடிவங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. இக்காலத்தில் அனைத்து நாடுகளிலும் அனைத்து மொழிகளிலும் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வடிவமாகத் திகழ்வது புனைகதைகளே. இது சிறுகதை நாவல் இரண்டையும் குறிக்கும் பொதுச் சொல்லாகவே பயன்பட்டு வருகிறது. இவ்விரண்டிலும் சிறுகதை இலக்கிய வடிவம் கலைதன்மை மிக்கதாய் உலகம் முழுவதும் போற்றப்படுகிறது.

'சிறுகதை' தமிழுக்குக் கிடைத்த புதிய இலக்கிய வடிவம் ஆகும். இந்தியச் சிறுகதை இலக்கியம் குறைந்த வயதுடையதே என்பர். வங்க மொழியில் தான் முதன் முதலாகச் சிறுகதை இலக்கியம் தோன்றி வளர்ந்தது. இந்தியாவின் முதல் சிறுகதை 1900இல் வெளிவந்த கிருஹாரிலால் கோஸ்வாமி இந்துமதியே ஆகும்.

தெலுங்கு மொழியில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளி வந்தது. மராத்தியில் 1936இல் முதல் சிறுகதைத் தொகுதி வெளி வந்தது. தமிழில் வ. வே சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரத்தை' முதலாகக் கொண்டு தொடங்குகின்றது. சுருங்கச் சொன்னால் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் சற்று முன்பின்னாக இந்திய மொழிகளில் சிறுகதை வடிவம் தோன்றி வளர்ந்தது எனலாம். இந்திய சிறுகதை இலக்கியம் ஏறக்குறைய 80 ஆண்டுகாலப் பழமையுடையது.

புதிய வடிவமான சிறுகதைதான் நமக்குப் புதிதேதவிரக் கதைகள் தமிழுக்குப் புதியவையல்ல. ஆற்றல் மிக்ககதை இலக்கியம் பழந்தமிழில் இருந்துள்ளது. தொல்காப்பிய நூற்பா ஒன்று அக்காலப் புனைகதை மரபினை விவரிக்கின்றது. அதில் பொருளொடு புணர்ந்த பொய்ம்மொழி' என்ற தொடரால் புனைகதை சுட்டப் படுகிறது.

இதழ்களே சிறுகதை இலக்கியம் வளமடைய அடித்தளமிட்டுத் தந்தன. இதழ்களின் தொகை அதிகமாகப் பெருகப்பெருக அவற்றில் பிரசுரிப்பதற்காகச் சிறு கதைகள் அதிகம் தேவைப்

பட்டன. அப்படி எழுதப்பட்ட சிறுகதைகள் இலக்கிய நோக்கம் கொண்டோ அல்லது பொழுது போக்கிற்காகவோ வெளியிடப் பட்டன. ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள் இவற்றுடன் காந்தி, சுதந்திரச்சங்கு, கலாமோகினி, தேனி, சந்திரோதயம் போன்ற வற்றுடன் மணிக்கொடி இதழும் ஒருபுதிய இலக்கியப் பிரவாகத்தை உண்டாக்கியது,

## 'மணிக்கொடியின் தோற்றம்'

நாட்டின் விடுதலையை அடுத்து உருவான இலக்கியச் சூழ் நிலையில் தமிழ் இலக்கியத்தின் எதிர் காலத்தைப் பற்றி நல்ல நம்பிக்கையூட்டும் தன்மை (தமிழ்) சிறுகதைப்படைப்பிலே தென்பட ஆரம்பித்தது.

அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலித்து நாட்டியல் முறையில் இலக்கியத் தரமான சிறுகதைகள் 1940 க்கு அனைத்து தமிழ் எழுத்தாளர்களால் தரப்பட்டன. இதற்கான விளக்கமும், முயற்சி யும் மணிக்கொடி இதழின் மூலம் வெளிப்பட்டது. ஆனந்தவிகடன் போன்ற இதழ்கள் எண்ணற்ற வாசகர்களை உருவாக்கி வைத் திருந்த காலம் அது. ஆங்கில இதழ்கள் உலகில் அனுபவமும், வெற்றியும் பெற்றிருந்த கு. ஸ்ரீநிவாசன், டி.எஸ். சொக்கலிங்கத்தின் துணையுடன் வ. ராவை ஆசிரியராகக் கொண்டு சக்தி மிக்க தமிழ் நடையின் மூலம் எந்தவொரு செய்தியையும் தெளிவாகவும், சரியாகவும் எடுத்துச்சொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் மணிக்கொடி இதழை 1933 இல் தொடங்கினார்.

கு. ஸ்ரீநிவாசன் மணிகொடியைப் பற்றி கூறுகையில், பொருள் புதிது, நடைபுதிது, எனும் பாரதியின் இலக்கணத்திற்கு இலக்கியமாக மணிக்கொடி தோன்றியது என்கிறார். ஞாயிறு தோறும் வெளிவந்த மணிக்கொடியில் வீரச்சொல், வீரச்செயல், ஞானதீபம், ஜனநடை, நடைச்சித்திரம் போன்ற பொதுத் தலைப்புகளின்கீழ் வாழ்வின் அனைத்துத் துறைகளையும் களமாகக்கொண்டு வெளிவந்தது.

இந்த இதழ் அதுவரை சிதறி இருந்த இலட்சிய எழுத்தாளர் களை ஒன்று சேர்த்தது. புதிதாகச் சொல்ல வேண்டும். புதிதாக எழுதவேண்டும். புதுமைகாண வேண்டும் என ஒரே விதமான மனபோக்குக் கொண்ட இவ்வெழுத்தாளர்கள் மணிக் கொடியின் கீழ் ஒன்றினைந்து ஒரு இளக்கமாகவே செயல்பட்டனர்.

ராமையாவின் உணர்ச்சிமிக்க கதைகளும், புதுமைப் பித்தனின் நடப்பியல் கதைகளும், வ. ராவின் சொற்சித்திரங்களும், இணைந்து மணிக்கொடிக்கு ஒரு மகத்தான தோற்றத்தைக் கொடுத்தன. மணிக்கொடியில் பி எஸ். ராமையா, புதுமைபித்தன், சி. சு. செல்லப்பா, பெ. கோ. சுந்தர்ராஜன் ந. பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்ரமணியன், சி, வைத்தியலிங்கம் போன்றவர்கள் சிறுகதைகளை எழுதினர்.

தொடக்ககாலத்தில் அரசியல் விமரிசனங்களுடன் இலக்கியப் பரிசோதனையையும் பொருளாகக் கொண்டு வெளிவந்தது. காந்தி, சுதந்திரச் சங்கு போன்ற சமகால இதழ்களில் சிறுகதைகள் வெளிவந்தன எனினும் இலக்கியச் சோதனையைத் தம் நோக்க மாகக் கொண்ட இதழ்கள் மணிக்கொடிக்கு முன்னோ பின்னோ இல்லை.

மணிக்கொடியின் பொருளாதாரம் பலமற்றதாகவே இருந்தது. 1934 இல் இது காந்தி இதழுடன் இணைந்துவிட்டது. அதே சமயம் மணிக்கொடியில் முக்கிய பொறுப்பு வகித்த கு. ஸ்ரீநிவாசன் டி எஸ். சொக்கலிங்கம், வ. ரா. போன்றவர்கள் அதனை விட்டு விலகிவிட்டனர். இதனைத் தொடர்ந்து புதுமைப்பித்தனும் டி. எஸ். ராமையாவும் மணிக்கொடியின் பொறுப்பை ஏற்று நடத்தினர். இதனால் அரசியல் விமரிசனங்கள் மணிக்கொடியில் பெற்றிருந்த இடத்தை இழந்ததோடு அது முற்றிலும் ஒரு இலக்கிய இதழாக, சிறப்பாகச் சிறுகதை இதழாகவே வெளி வந்தது.

இலக்கிய விழிப்புணர்வு பொது மக்களிடையே ஏற்படா திருந்த அக்காலத்தில் முற்றிலும் இலக்கிய இதழாக மாறிய மணிக்கொடியின் வாழ்வு மிகவும் பாதிப்புக்குள்ளாயிற்று. 1936 இல் மணிக்கொடி நிறுத்தப்பட்டது.

இலக்கியத் துறையில் ஆர்வம் கொண்ட ஒரு சிலரின் உதவி யோடு நவயுகப் பிரசுராலயம் என்று வரையறுக்கப்பட்ட நிறுவனத் தைத் தோற்றுவித்து 1937 இல் மணிக்கொடியை மீண்டும் வெளி யிட்டனர். இம்முறை டி. எஸ். சொக்கலிங்கம் பொறுப்பாளராகவும், டி. எஸ். ராமையா அதன் ஆசிரியராகவும் செயலாற்றினர்.

பின்னாளில் பா. ராமஸ்வாமி இந்நிறுவனத்தின் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றபின் பி. எஸ். ராமையா விலக ; இதில் இருந்து மணிக்கொடி குழுவினருக்கும் ; மணிக்கொடிக்கும் இருந்த உறவு முடிவற்றது. தக்க எழுத்தாளர் இன்மையால் மீண்டும் மணிக் கொடி நின்றுவிட்டது.

இந்திய விடுதலைக்குப் பிறகு பி. எஸ். ராமையா மீண்டும் மணிக்கொடியை அதே இலட்சியத்துடன் நடத்த முற்பட்டார். முற்றிலும் மாறுபட்ட அக்காலச் சூழலில் நிலை கொள்ள முடியாமல் போனதால் மணிக்கொடியைக் கைவிட்டனர். ஆனால் மணிக்கொடியில் பணியாற்றிய எழுத்தாளர்கள் பலர் கிராம ஊழியன் சந்திரோதயம், கலாமோகினி, தேனீபோன்ற இதழ்களில் எழுதத் தொடங்கினர்.

மணிக்கொடி இயக்கத்தின் அடிப்படை நோக்கம் இலக்கியப் பரிசோதனையே இலக்கியப் பொருள் எதுவாக இருக்கவேண்டும் என்பது பற்றியும், அப்பொருள் எவ்வாறு கையாளப்படவேண்டும் என்பது பற்றியும் கருத்தொற்றுமையுடன் மணிக்கொடிக் குழுவினர் செயல்படவில்லை. மேலைநாட்டு முறைகளுக்கு ஏற்ப நவீன தமிழ் இலக்கியத்தை உண்டாக்க விரும்பியோரின் கூட்டணி யாகவே மணிக்கொடி அமைந்தது. புனைகதைத் துறையிலும், கவிதைத் துறையிலும் புதியனவற்றைப் புகுத்தவும், புதிய முறையில் கூறவும் விரும்பியவர்களே மணிக்கொடியில் இடம் பெற்றனர்.

இலக்கியத்தின் மேன்மை பற்றியும் அதன் சிறப்புப்பற்றியும் எண்ணத்துணிவு கொண்டிருந்த இவ்வெழுத்தாளர்கள் தங்கள் இலக்கியப் படைப்புகளுக்குப் போதிய வெளியீட்டு வசதிகள் இல்லாது இருந்ததாலும், தங்கள் ஆக்கங்களுக்கு எதிராகத் தோன்றிய எதிர்ப்பாலும் ஒன்று பட்டனர். இலக்கியத்தரத்தின் தளர்ச்சியையும் ; வீழ்ச்சியையும் தாக்கினர்.

மணிக்கொடியில் எழுதிவந்தவர்களிடையே இலக்கியம் பற்றிய கருத்து வேறுபாடுகள் பல இருந்தன. மேலும் வாழ்க்கை, சமுதாயம் பற்றிய கருத்துக்களிலும் அடிப்படை ஒற்றுமை அவர்களிடம் காணப்படவில்லை. இதை அவர்கள் எடுத்துக் கொண்ட கதைப் பொருள்களிலும் கையாளும் முறையிலும் காண முடியும்.

புதுமைப்பித்தனின் இலக்கியக் கண்ணோட்டமும், கு. பா. ராமன் கண்ணோட்டமும் வேறுபட்டவை மட்டுமல்ல. முரணானவையும் கூட. இவ்வேற்றுமை மணிக்கொடிக் குழுவினர் ஒற்றுமையுடன் இருந்த காலத்தில் தோன்றவில்லை. பின்னாளில் நன்கு வெளிப்பட்டது. எப்படியிருப்பினும் மணிக்கொடி இதழ் சிறுகதைத் துறைக்கு ஆற்றிய பணியே இங்கு முக்கியமானதாகும். அக்காலச் சூழலில் புற இதழ்களினால் கவனிக்கப்படாது இருந்த இலக்கியப் பரிசோதனைகளை நடத்திட மணிக்கொடி காரணமாக இருந்தது.

தமிழ் இலக்கியப் பரப்பில் தமிழுக்கு அணிசெய்யும் இலக்கியப் படைப்புகளில், சிறுகதையும் இடம்பெறத் தொடங்குவது மணிக்கொடி காலத்திலேதான். தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் மணிக்கொடி ஆற்றியுள்ள பணி குறிப்பிடத்தக்கதாகும்.

# மாமூலனார் காலம்—ஒரு வரலாற்று ஒப்பாய்வு

பூரண சந்திர ஜீவா, M. A., B. Ed.,

1. சங்க இலக்கியங்களில் காணப்படும் பாடல்களில் காலத்தால் முற்பட்டவற்றுள், மாமூலனாரது பாடல்கள் தனிச்சிறப்புடையவை என்றுத்துணிந்து கூறலாம். மாமூலனாரது காலத்தை ஆய்ந்துகூற இயலுமானால் அதன் அடிப்படையில் சங்க காலத்தை அமைப்பது எளிதாகும். மாமூலனாரது காலத்தை வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2. மாமூலனார் என்ற பெயரில் சங்க நூல்களில் ஒருவரே உள்ளார். இவர் பாடியவை. அகநானூறு 27, குறுந்தொகை 1, நற்றிணை 2 ஆக 30 பாடல்கள். இப்பாடல்கள் தமிழக வரலாற்றுக்கு உதவுவன. 2 : 1 ; இவர் எந்நாட்டினர் என்றுகூற இயலவில்லை. ஒரு புலவர் தன்பாடல்களில் தன்னையறியாது தன்னைப்பற்றிய செய்திகளை வெளிப்படுத்தி விடுவதுண்டு. ஒரு நாட்டிற்குரியவர் அந்நாட்டினை மையமாக வைத்துப் பிறநாட்டின் திசைகள், இடங்கள், புவியியல் அமைப்புகள் ஆகியவற்றை உணர்ந்திருப்பார். எருமை நாடு என்பது (இன்றைய மைசூரின் பகுதிகள்) தமிழகத்துக்கு வடக்கே உள்ள நாடாதலின் அதனை வடுகர்நாடு என்றே கூறுவர். பாண்டிய நாட்டினரான நக்கீரர், 'வடுகர் பெருமகன் பேரிசை எருமை நன்னாடு' என்பார் (அகம், 258). ஆனால்,

'நுண்பூண் எருமை குடநாட் டன்ன'

என்று (அகம், 115) மாமூலனார் குறிப்பிடுகின்றார். எருமையின் மேற்கு நாடு என்பது இதன் பொருளாகும். எருமை நாடு மேற்கு நாடானால் மாமூலனாரது நாடு கிழக்கு நாடாக இருக்க வேண்டும். இதனால், ஒப்பு நோக்கித் தொண்டை நாடே அவரது நாடு என்று உணரலாம்.

2 : 2 ; வரலாற்று நிகழ்ச்சிகளைப் புனைந்துரை இல்லாது இயல்பாகக் கூறும் பாங்கு இவரது தனிச்சிறப்பாகும். இவரால் பாடப்பட்ட மன்னர்கள் காலத்தையோ, அல்லது அவர்களது காலத்தை ஒட்டியோ அவர் வாழ்ந்ததாகக் கருதலாம். அவரது சமயம் யாதென்று தெரியவில்லை.

3 : இவரது காலத்தை ஆராயுமுன் இவரது பாடல்களில் காணும் அரசர்கள், அரசகுலங்கள், தலைவர்கள் பற்றி அறிந்து நிரல்படுத்த வேண்டும்.

1. சேரலாதன் (பெருஞ்சேரலாலன்) அகம், — 55.
2. சேரலாதன் (நெடுஞ்சேரலாதன்)— அகம், 127, 347.
3. குட்டுவன் (பல்யானைச் செல்கெழு) — அகம், 91, நற்றி, 14
4. உதியஞ்சேரலாதன் (பெருஞ்சோற்று)—அகம், 65, 233.
5. கரிகால் வளவன — அகம், 55.
6. திதியன் (உறையூர்)—அகம், 331.
7. செம்பியன் (அகப்பாவை வென்றவன்) – நற்றி 14.
8. புல்லி (வேங்கடமலைப் பகுதி) -- அகம், 393.
9. நந்தர் (பாடலிபுத்திரம்— மகதநாடு) – அகம், 265.
10. மோரியர் (மகதநாடு)— அகம் 251, 281.
11. கோசர் (துளுநாடு)—அகம் 15, 251.
12. வடுகர் (அந்திரர்)—அகம் 281, 295; குறுந்தொகை, 11
13. எருமை நாடு (குட நாடு—மைசூர்ப் பகுதி)— அகம், 115.
14. பாணன் நாடு (Banas)—அகம், 325.
15. கட்டிநாடு (தமிழகத்துக்கு வடக்கு)—குறுந், 11

இவர்கள் தவிர வேறு பல குறுநில மன்னர்களும், அரசர்களும் இவரால் குறிக்கப்படுகின்றனர். இவர்களது ஆட்சித்தொடர்பான நிகழ்ச்சிகள் மாமூலனார் காலத்தை அறிய மிகுதியும் உதவுகின்றன.

3 : 1 இவரால் பாடப்பட்ட சேரமன்னர் நால்வரில் காலத்தால் முந்தியவன் உதியஞ்சேரலாதன்.

'' துறக்க மெய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்''

என்று (அகம். 233) உதியஞ்சேரல் தன் முன்னோர் நினைவாகப் பெருஞ்சோறு கொடுத்த நிகழ்ச்சியைக் குறிக்கிறார். நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்' என்று குறிப்பிட்டு அவனது பன்னாட்டு வெற்றிகளைக் கூறுகிறார்.

3 : 2 காரிகாலனுடன் போரிட்டு வடக்கிருந்த சேரலாதன் பற்றிக் கூறுகிறார் (அகம் 55). முந்நீர் ஓட்டி கடம்பறுத்து இமயத்தில் விற்பொறித்த சேரலாதன் பற்றியும் (அகம், 127) கூறுகிறார். இவர்கள் முறையே பெருஞ்சேரலாதனும், நெடுஞ் சேரலாதனுமாவர். அடுத்து, குட்டுவன் என்ற பெயரால் ஒருவனை அழைக்கிறார்.

'கடுங்கண் மழவர் களவுழ வெடுத்த
நெடுங்கால் ஆசினி ஓங்காட் டும்பர்
விசிபிணி முழுவிற் குட்டுவன் காப்பப்
பசியென அறியாப் பனைபயி லிருக்கைத்
தடமருப் பெருமை தாமரை முனையின்
குடமுதிர் பலவின் கொழுநிழல் வதியுங்,
குடநாடு பெறினுந் தவிரலர் ...'

என்று (அகம் 91) இவனைப் பாடுவார். குலப்பெயரால் கூறு வதால் இக்குட்டுவன் யாரென்று தெரியவில்லை. ஆனால், வேறொரு பாடலில்,

'நட்டனர் வாழி தோழி குட்டுவன்
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகற்றீ வேட்ட ஞாட்பினும் மிகப்பெரிது
அலரெழ ......... ......... .........'

(நற்றி, 14) என, குட்டுவன் அகப்பாவைச் சோழன் வென்ற செய்தியைக் கூறுகின்றார். பெருஞ்சேரல், நெடுஞ்சேரலை ஒட்டிய மன்னர்களது வரலாற்றை ஆராய்ந்தால் அகப்பாவுடன் தொடர் புடைய குட்டுவன் யார் என்ற விளக்கம் கிடைக்கிறது. பதிற்றுப் பத்தின் மூன்றாவது பத்தைப் பாடிய பாலைக் கௌதமனார் பல்யானைச் செல்கெழு குட்டுவன் தனக்குரிய அகப்பா என்ற அரணை வென்று கொண்ட நிகழ்ச்சியை அவனது மிகப்பெரிய வெற்றியாகப் பாடுகிறார்.

'கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதில் நிரைப்பதணத்து
அண்ணலம் பெருங்கோட் டகப்பா எறிந்த
பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ'

என்பது பாடற்பகுதி. இக்குட்டுவன் நெடுஞ்சேரலாதனின் தம்பி என்பது மரபு. கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் எனப்படும் செங்குட்டுவனுக்கு முன்பு ஆண்டவன் இக்குட்டுவன் என்பதைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது (கட்டுரை காதை காண்க). எனவே, இக்குட்டுவன் வென்று வைத்திருந்த அகப்பாவையே சோழன் வென்றான் எனலாம். மாமூலனார் குறிப்பது இக்குட்டுவனையே.

8: 3: மாமூலனார் ஒரு பாடலில் 'வானவரம்பன் வெளியத் தன்ன' என்று (அகம், 359) குறிப்பிடுகிறார். இவன் யார்? வானவரம்பன் என்ற பெயர் களங்காய்க் கண்ணி நார்முடிச்

சேரலுக்கும் (பதிற்றுப்பத்து : 4 : 8 வரி 12), ஆட்கோட்பாட்டுச் சேரலாதனுக்கும் (பதிற்று : 6 : 8 : வரி 12) வழங்குகின்றது. இவர்கள் காலத்தால் சற்றுப்பிற்பட்டவர்ளாவர். வானவரம்பன் என்ற பெயர் முதன்முதலில் பெருஞ்சோற்று உதியசேரலாதனுக்கும் வழங்கப்படுகிறது (புறநானூறு : 2 ; வரி 12). இப்பாடலைப் பாடியவர் உதியஞ்சேரலாதன் காலத்து வாழ்ந்த முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார். எனவே மாமூலனார் பாடியதும் இச்சேரனையேயாதல் வேண்டும்.

3:4 : மேற்காணும் செய்திகளால் அடுத்தடுத்து வாழ்ந்த சேரமன்னர் நால்வரைப் பாடியுள்ளார் என்று கூறலாம். அவர்கள் :

1. பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்.
2. சேரமான் பெருஞ்சேரலாதன்.
3. குடக்கோ நெடுஞ்சேரலாதன்.
4. பல்யானைச் செல்கெழு குட்டுவன்.

இவர்களில் 3,4 எண்களை உடைவர்கள், உடன்பிறந்தவர்கள் என்ற பதிற்றுப்பத்தின் பதிகக்குறிப்பால் இவர்கள் அடுத்தடுத்து ஆண்டனர் என்று கொள்ளலாம். ஆனாலும், இவர்கள் வரிசை முறையை அமைக்க வேண்டியது இக்கட்டுரைக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

4 : மேற்கண்ட அரசருள் பெருஞ்சேரலாதன் கரிகாலனுடன் போர் செய்து வடக்கிருந்து இறந்தான். நெடுஞ்சேரலாதனும், வேற்பஃறடக்கை பெருவிறற் கிள்ளியும் போரிட்டு இருவரும் அப்போர்க்களத்தில் இறந்தனர் என்பதை அறிவோம். இவ்விரு நிகழ்ச்சிகளையும் மாமூலனார், கழாத்தலையார், பரணர் ஆகியோர் பாடியுள்ளனர். மாமூலனார் பெருஞ்சேரல்-கரிகாலன் போரைப்பாடியுள்ளார். நெடுஞ்சேரல் பெருவிறற் கிள்ளி போரைத் பாடவில்லை. ஆனால், நெடுஞ்சேரலுக்குப் பின்னர் ஆண்ட பல்யானைக் குட்டுவனைப்பாடி இருத்தலால், அவர் இந்நிகழ்ச்சியை அறிவார் எனலாம்.

4 : 1 கழாத்தலையார் பெருஞ்சேரலாதன் - கரிகாலன், நெடுஞ்சேரலாதன் -பெருவிறற்கிள்ளி போரை நேரிருந்து பாடுகிறார். பரணர் பின் இருவர் போரைப்பாடுகிறார். இருவருமே அதே போர்க்களத்தில் பாடியுள்ளனர். மன்னருள் முதல்வன் இதியஞ்சேரலாதன் காலத்தால் பலரினும் முற்பட்டவன். பின்னருவர் அடுத்தடுத்து ஆண்டவர்கள் இடைப்பட்ட இருவருள் பெருஞ்சேரலாதன் நெடிஞ்சேரலாதன் ஆகியோரில் எவர் முன்

எவர் பின் என்று காணுதல் நன்று. இதுபற்றி மாமூலனார் ஏதும் கூறவில்லை. கழாத்தலையாரும் கூறவில்லை. பரணரே இதனை உணர்த்துகிறார். இவர் நெடுஞ்சேரலாதனின் மகன் எனப்படும் கடலோட்டிய வேல்கெழு குட்டுவனுடைய காலத்தினர். அவனைப் பதிற்றுப்பத்தில் பாடியுள்ளார். இவன், நெடுஞ்சேரல், பல்யானைக் குட்டுவன் ஆகியோருக்குப் பிறகு ஆண்டவன் காலத்தால் பிற்பட்டவனும், நெடுஞ்சேரலின் மகனுமான இவனைப் பாடிய பரணர், நெடுஞ்சேரலாதனது 58 ஆண்டுகள் ஆட்சிக்கு முன் நடந்த பெருஞ்சேரலாதன் கரிகாலன் போரைப்பாடிய கழாத்தலையாரை விடவும் காலத்தால் பிந்தியவரே. இதனால் நெடுஞ்சேரலைவிட பெருஞ்சேரலாதன் காலத்தால் முந்தியவன் எனலாம். கரிகாலன் இந்த கடலோட்டிய வேல்கெழு குட்டுவனை விட பிற்பட்டவன் என்று எவரும் கூறார். பரணர் கரிகாலனது தந்தை எனப்படும் உருவபஃறேர் இளஞ்சேட் சென்னியைப் பாடியதாக உள்ள உரைக்குறிப்பு இதனால் பொருந்தாமை அறிக. இன்னும் பிற்காலத்தவரான பெருங்குன்றூர் கிழாரும் இளஞ்சேட் சென்னியைப் பாடியதாக உள்ளதும் இதற்குச் சான்றாகும்.

4 : 2 : இதனால் பெருஞ்சேரலாதன் நெடுஞ்சேரலாதனுக்கு முன்பு ஆண்டவன் என்று உணரலாம். எனவே உதியஞ்சேரலாதனுக்குப் பிறகு பெருஞ்சேரலாதனே பதவி யேற்றான் என்றும், கரிகாலனிடம் தோற்று வடக்கிருந்து இறந்ததால் நெடுஞ்சேரலாதன் சிறுவயதில் பட்டமேற்று நெடுங்காலம் ஆட்சி செய்தான் என்றும் கருதலாம். பெருஞ்சேரலாதன் இளமையிலேயே இறந்திருக்க வேண்டும். இவன் வடக்கிருத்தலைப் பாடிய கழாத்தலையார்,

> 'தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
> புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
> வாழ்வடக் கிருந்தனன் ......... .........'

என்று (புறம், 65) பாடுகிறார். 'தன்போல் வேந்தன்' என்ற தொடருக்கு 'தன் போல் ஒரு அரசன்' என்று மட்டும் பொருள் கொள்ளக் கூடாது. 'தன் போல் அறிவு, வலிவு, வயது யாவற்றிலும் ஒத்த அரசனாகிய கரிகாலன்' என்று கொள்ள வேண்டும். இதனால், பெருஞ்சேரலாதன் இளமைப்பருவத்திலேயே இறந்து போனதாகக் கருதலாம். இவன் பட்டமெய்தி 10 ஆண்டுகளே ஆட்சி செய்ததாக எண்ணத் தோன்றுகிறது. இவனை உதியஞ்சேரலாதனின் தம்பி, அல்லது மூத்த மகனாகக்

கொண்டால் உதியஞ்சேரலாதனின் மகனான நெடுஞ்சேரலாதன் 58 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்க வாய்ப்புண்டு.

4 : 3 இச்செய்திகளால் பெறப்படும் சேர மன்னர் வரிசை :

1. உதியஞ்சேரலாதன்
2. பெருஞ்சேரலாதன் — கரிகால் வளவன்
3. நெடுஞ்சேரலாதன் — பெருவிறற்கிள்ளி
4. பல்யானைக்குட்டுவன் — செம்பியன் (சோழன்)

இவர்களுள் பல்யானைக் குட்டுவன்வரையில் பாடியிருத்தலால் அவன் காலத்தில் மாமூலனார் இறந்தார் என்று கருதலாம். இவன் தன் அகப்பாவை இழந்ததை ஒரு பாடலில் பாடுகிறார். வேறொரு பாடலில் 'இவன் நாட்டு வளத்தை பாடுகிறார் இப்பாடலில் 'குட்டுவன்காப்ப' என்று பாடுகிறார். இத் தொடருக்குக் 'குட்டுவன் என்பான் புரத்தலால்' என்று உரைகூறுகின்றனர்.[1] புரப்பதாக நிகழ்காலத்தில் கூறுவதால் இப்பாடல் காலத்துக் குட்டுவன் வாழ்ந்தான் என்று கருதலாம். குட்டுவன் 25 ஆண்டுகள் ஆண்டதாக பதிற்றுப்பத்துக் கூறுகிறது. எனவே முதல் 10 ஆண்டுகளில் அகப்பாவை வென்று, அடுத்த 10 ஆண்டுகளில் அதனை இழந்தான் என்று கொண்டால், மாமூலனார் இவனது 20 வது ஆட்சியாண்டளவில் இறந்தார் எனலாம்.

5 : மாமூலனாரது காலத்தை ஆராய்வது இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும். அவர் தன் கால இந்தியாவின் அரசியல் சூழலைப் படம்பிடித்துக் காட்டுகிறார். இச்செய்திகளே அவரது காலத்தை நிறுவப்போதுமான சான்றுகளாகும். அவர் காலச் சூழல் வருமாறு : (1) மௌரியப்பேரரசு சிதைந்து போயிற்று. (2) தமிழக அரசர்கள் வடதிசை எல்லைப்புற மொழிமாறுபட்ட நாடுகளை வென்று தங்கள் ஆட்சியில் வைத்திருந்தனர். இதனால் வடநாட்டு மன்னர்கள் தமிழரசர்களது முயற்சிகளைத் தங்களுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலாகக் கருதி இருக்க வேண்டும்.(3) மௌரியர்களது பலம் குன்றியதால் அவர்களதுபோர் முயற்சிகள் ஓய்ந்து போயின. (4) இதனால் அமைதி நிலவியது, மௌரிய மன்னர்கள் படையெடுப்பிற்காக அமைத்த மலைப்பாதைகளில் மக்கள் போக்குவரவு மிகுதியாயிற்று

5 : 1 மௌரியர்கள் தென்னிந்தியப் பகுதிகளை வென்று தங்கள் பேரரசை விரிவுபடுத்தினர். மேலும், தெற்கு நோக்கிப் படையெடுத்தனர்.

'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிர முன்னிய வரவிற்கு'

என்று இதனை மாமூலனார் குறிக்கிறார். 'தென்திசை நாடுகளைப் பற்ற எண்ணிப் போந்த வருகைக்கு' என்று இதற்கு உரையாசிரியர்கள் விளக்கம் கூறுவர்.[2] இப்போரில் வடுகர் எனப்படும் ஆந்திரர் அவர்களுக்கு உதவி, முன்னணிப்படையாக வந்தனர். வடுகர் என்பவர் யார் என்றும் மாமூலனார் விளக்குகிறார்.

'புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎம் ... ... ...'

(அகம்,295)என்பார்.புல்லியின் குன்றமாகிய திருவேங்கடமலைக்கு அப்பால் வடுகர் வாழும் மொழி மாறுபட்ட தேசம் இருப்பதாகக் கூறுகின்றார். அசோகர் கல்வெட்டில் இந்த வடுகர் ஆந்திரர் என்று குறிக்கப்பட்டுள்ளனர். தன் நாட்டில் ஆந்திரர், புலீந்தர் முதலியோர் வாழ்வதாகக் கூறுவதால் (13 வது கற்பாறை ஆணை) அறியலாம். ஆந்திரநாடு அப்போது கோதாவரி நதிக்கு வடக்கே இருந்தது என்கிறார் ரொமிலாதாபர்.[3] கோதாவரி-கிருஷ்ணா நதிகளுக்கு இடையில் இருந்ததாகக் கூறுகிறார் சத்தியநாதையர்.[4] மாமூலனார் வடக்கே வேங்கடமலைக்கு அப்பால் அவர்களது மொழிமாறுபட்ட தேசம் இருந்தது என்று தெளிவாகக் கூறுகிறார். எனவே, பேரரசின் எல்லை நாட்டினர் முன்னணிப்படையாக வந்தனர் என்ற மாமூலனாரின் கூற்று வரலாற்று உண்மையாதல் அறிக.

5 : 2 தென்திசைப் படையெடுப்பிற்குப் பயன்பட்ட படைகள் பாடலிபுத்திரத்தில் இருந்து வந்திருக்க இயலாது. பேரரசின் தெற்கு மாநிலம் ஆந்திரம்,கருநாடகத் தென்பகுதிகளை உள்ளடக்கி இருந்தது. இதற்குச் சுவர்ணகிரி (இன்றைய கனககிரி-கருநாடகம்) தலைநகராக விளங்கிற்று. பேரரசின் பிரதிநிதி ஆளுநராக இருந்து இப்பகுதிகளை நிர்வாகம் செய்து வந்தார். அசோகர் கல்வெட்டில் இவர் 'ஆர்யபுத்திர' என்று அழைக்கப்பட்டார்[5]. அரசரது மிக நெருங்கிய உறவினரோ பட்ட இளவரசரோதான் இவ்வாறு அழைக்கப்படுவார். சுவர்ணகிரி தவிர பிற மாநில ஆளுநர்கள் 'குமார' என்று(Kumara-கல்வெட்டில் Kumala) அழைக்கப்பட்டனர். இதனை 8வது பெரிய கற்பாறை ஆணைகளால் அறிகிறோம். ஆனால் தெற்கத்தியப் பிரதிகளில் (மைசூர்) சுவர்ணகிரியின்

ஆளுநர் 'ஆர்யபுத்திர' என்றே அழைக்கப்படுகிறார் (Aryaputa- கல்வெட்டில் ayaputa. 1 வது சிறிய கற்பாறை ஆணைகள்), குமார என்று அல்ல. அசோகர் கல்வெட்டு இவ்வாறு குறிப்பிடுவதால் சுவர்ணகிரி ஆளுநர் குமாரர்களைவிடவும் மிகுந்த உயர் தகுதியை வகித்தார் என்று அறியலாம்[6]. தென்னிந்தியாவில் பேரரசு மிகுந்த கவனம் செலுத்தியதை இது காட்டுகிறது. தமிழரசர்களின் கடுமை யான எதிர்ப்பே இதற்குக் காரணமாக வேண்டும்.

5 : 3 : மௌரியப் படையெடுப்பை மாமூலனார் தெளிவாக எடுத்துரைத்து இருக்கிறார். சுவர்ணகிரி ஆளுநரின் வேறொரு படையெடுப்பு முயற்சியைக் குறிப்பிட்டுள்ளார். கோசர்கள் என்போர் கி. மு. 3 ஆம் நூற்றாண்டளவில் துளு நாட்டில் வாழ்ந்தனர்.

'மெய்ம்மலி பெரும்பூண் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்க்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவின் துளுநாட் டன்ன'

என்று (அகம், 15) கூறுகிறார். மோகூர் கோசர்களின் தலை நகரம். மோகூர் அவைக்களத்தில் கோசர்களின் தோற்றம் சிறப்பித்துக் கூறப்படுகிறது மதுரைக்காஞ்சியில்[7] மழையொழுக்கு அழியாத பிழையா விளையுள் உடைய நாடு என்பார் மாங்குடி மருதனார்.[8] துளுநாடு இத்தகைய தன்மைகள் உடைய நாடே யாகும். கோசர்களது நாடு நெய்தல் நிலமாகும் என்று பிற புலவர்களும் கூறுவது இக்கருத்தை உறுதிசெய்கிறது[9]. இக்கோசர்கள் தங்கள் பகைவர்களுடன் போரிட்டு, அவர்களைப் போர்க்களத்தில் சிதைத்தபோது, தங்கள் ஆணைப்படி கோசர்கள் பணிந்து போகாததால், அப்பகைவர்களுக்குப் பரிந்து, கோசர்களது மோகூர் மீது மௌரியர் பகை கொண்டு வந்தனர் என்கிறார் மாமூலனார்

......... ......... ......... வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்'

(அகம், 251) என்று கூறுகின்றார். இப்பாடலில் வரும் வம்ப மோரியர் என்றத் தொடருக்குப் புதிய மரபினரான மௌரியர் என்பது பொருள். மௌரியர் ஆட்சியின் தொடக்க காலத்தில் இப்படையெடுப்பு நடைபெற்றது என்பது இதனால் உறுதியா கிறது. மேலும் இப்பாடலால் கோசர்களது நாடு பேரரசின் எல்லைக்குள் இல்லை என்பதும் உறுதியாகிறது. அசோகர் தனது 13வது கற்பாறை ஆணையில் சத்தியபுத்திரர் என்போர் தன்னாட்டு எல்லைக்கு அப்பால் இருப்பதாகக் குறித்திருப்பதும், இந்தச் சத்தியபுத்திரர் என்போர் வாழ்ந்தநாடு தென் கன்னட மாவட்டத்தை உட்கொண்ட பிரதேசமென்று வரலாற்றறிஞர் எம். கோவிந்தபாய் கூறுவதையும் ஒப்பு நோக்குக[10]. சத்தியபுத்திரர் வாழ்ந்த நாடென்பது கோசர்கள் வாழ்ந்த நாடே என்று கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கூறுவதையும் நோக்க, துளுநாடே கோசர்நாடு என்று உணர்கிறோம். அசோகர் கல் வெட்டால் கோசர் மௌரியர் படையெடுப்பில் தோற்றுப் போக வில்லை என்று தெரிகிறது. படையெடுப்பு வெற்றி பெறாததின் காரணம் தெரியவில்லை. சோழ, பாண்டிய, சேர, சத்தியபுத்திர நாடுகள் அசோகர் காலத்தில் தன்னாட்சி பெற்றே இருந்ததாக அசோகர் கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்காலத்தில்தான் போர் முயற்சிகள் குறைந்து அமைதி நிலவி இருக்க வேண்டும்.

5 : 4 : இந்நிலையைச் சொற்களால் வடித்துக் காட்டும் மாமூலனார் இச் செய்திகளால் ஒரு தெளிவான காலக்குறிப்பையும் தருகிறார்.

'மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைந்த
இலங்குவெள் ளருவிய அறைவா யும்பர்'
'தென் திசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைந்த,
அறையிறந் ... ... ...

என்ற இரு பாடல்களிலுமே படையெடுப்பிற்காக மலைகளை வெட்டிப்பாதை அமைத்த செய்திகள் உள்ளன. தேர்ப்படைகள் செல்லபாதை அமைத்த நிகழ்ச்சி கடந்த காலத்தில் நடைபெற்ற ஒன்றாகவும், இப்போது அமைதி நிலவுவதால் அப்பாதைகள் மக்கள் போக்குவரவிற்காகப் பயன்படுவதாகவும் இக்குறிப்புகள் உணர்த்துகின்றன. இத்தகைய அமைதி அசோகரது கலிங்கப் போருக்குப் பின்னரே தோன்றியது. அவர் கி. மு. 261 ஆண்டிற்குப்

பின்னரே புத்தமதத்தைத் தழுவினார். கி. மு. 261 இல் கலிங்கப்போர் நடந்தது. அந்தப் போருக்குப் பின் தன் நாடு பிடிக்கும் முயற்சிகளை அவர் கைவிட்டார் என்று கூறுவர்.[11] அதுவரை அசோகர் தன் நாட்டை விரிவாக்கும் கொள்கைகளைக் கொண்டிருந்தார் என்றும், அப்போருக்குப் பின்னரே அவ்விரிவாக்கக் கொள்கைகளைக் கைவிட்டார் என்றும் G. தன்பர் என்ற வரலாற்று ஆசிரியர் கூறுகிறார்.[12] எனவே, இப்பாடல்கள் கி. மு. 264 க்குப் பின்னரே இயற்றப்பட்டிருக்க வேண்டும். அசோகர் காலத்திலேயே தென்னிந்திய-வடஇந்தியத் தொடர்புகள் அதிகரித்தன என்பது வரலாற்று உண்மை. எனவே இப்பாடல் களின் பொருளை நோக்க - தலைவன் பொருளீட்ட இப்பாதை வழியே சென்றான். அசோகரது கலிங்கப்போருக்குப் பின்னரே மாமூலனார் இப்பாடல்களைப் பாடினாராதல் வேண்டும்.

6 : மௌரியப் பேரரசு நிறுவப்பட்டபோது, அதனை நிறுவிய சந்திர குப்தர் வடக்கு வடமேற்கு இந்தியாவிலேயே தன் கவனத்தை நிலைநிறுத்த வேண்டியிருந்தது. எனவே பிந்துசாரர் ஆட்சிக்கு வந்ததும் தன்கவனத்தைத் தென்னிந்தியப் பகுதிகளை நோக்கித் திருப்பினார் அவர் காலத்திலேயே தென்னிந்தியப் போர் முயற்சிகள் தீவிரமடைந்தன என்பது இன்றைக்கு வரலாற்று ஆசிரியர்களால் பெரிதும் ஏற்கப்பட்ட உண்மையாக உள்ளது (இக்காலப் போர் முயற்சிகளைப்பற்றி மேலும் அறிய விரும்புவோர் மௌரியரைப்பற்றிய சங்கப்பாடல்கள் காலம் ஓர்ஒப்பாய்வு' என்ற என் கட்டுரை காண்க. தமிழ்ப்பொழில், 1985, துணர் 59, மலர் 8, 9)

6 : 1 இப்போர் முயற்சியால் தமிழகத்திற்கு அச்சுறுத்தல் தோன்றியது. தமிழரசர் தங்கள் பகையையும், வேற்றுமைகளை யும் மறந்து ஒன்றுபடவேண்டிய இன்றியமையாமை தோன்றியது. இதுபற்றிய மாமூலனார் கருத்தைக் கலிங்க மன்னன் காரவேலனது ஹாதிகும்பா கல்வெட்டு உறுதி செய்கிறது. மௌரியப்பேரரசு சிதைவுற்ற பின்னால் கி. மு. 185 ல் காரவேலன் ஆட்சிக்கு வந்தான். அவனது 13வது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட அக்கல்வெட்டில் தமிழரசர்கள் ஒரு கூட்டிணைவினை உருவாக்கி இருந்தனர் என்று கூறுகிறான். கல்வெட்டுப் பகுதி[13].

L. No. 11 : Janapata - bhavanam - chaterasa Vasa - Sata katam bhimdati Tamira-daha Samghatam ( . )

L. No. 11: and, for the well being of (his) realam, breaks the Contederacy of Tamil countries (which had been) formed in the year 113.

வரி, எண். 11: மேலும், தன் ஆட்சியின் நலனுக்காக, 113 ஆம் ஆண்டில் தமிழக நாடுகளால் உருவாக்கப்பட்ட கூட்டிணை வினை உடைக்கிறான்.

இப்பகுதியால் காரவேலனுக்கு 113 ஆண்டுகளுக்கு முன்பு இக்கூட்டிணைவு தோன்றியது என்று அறிகிறோம். அவன் கி. மு. 185ல் ஆட்சியேற்றான் எனவே, கூட்டிணைவு கி. மு. 298ல் தோன்றியது என்று கொள்ளலாம். பிந்துசாரன் கி. மு. 301ல் ஆட்சிக்கு வந்தான், பின் 3 ஆண்டுகள் கழித்து அவன் தென்னாட்டுப் படையெடுப்பைத் தொடங்கியிருக்க வேண்டும். இந்த அச்சுறுத்தலே தமிழக நாடுகளின் கூட்டிணை விற்கு அடிப்படையாக இருக்க வேண்டும். காரவேலன் கல்வெட்டுப்படி அவன் கி. மு. 175-174ல் தமிழகத்தின் மீது படையெடுத்தான். அப்படையெடுப்புவரையில் அக்கூட்டிணைவு இருந்தது என்றும் கூறுகிறான். அக்கூட்டிணைவை உடைப்பதே தன் நாட்டிற்கு நன்மை தருவதாகும் என்று அவன் கூறுவது எண்ணத் தகுந்ததாகும்.

6 : 2 மாமூலனார் இத்தகைய நிலையைத் தன் பாடல் ஒன்றில் காட்டுகிறார். பேரச்சுறுத்தலை எடுத்துரைத்த புலவர் காரவேலன் கல்வெட்டை உறுதி செய்யும் சான்றினையும் வழங்குகிறார்.

'புண்ணுமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்ணுமிழ் கழுகின் கானம் நீந்திச்
சென்றா ரன்பிலர் தோழி வென்றியொடு
வில்லலைத் துண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே'

(அகம், 31) என்கிறார். தமிழக மூவேந்தரும் மொழி மாறுபட்ட நாடுகளை வென்று, அவற்றைப் பாதுகாப்பதாக இந்தப் பாடலில் மாமூலனார் கூறுகிறார். 'காக்கும்' என்று நிகழ்காலத்திலேயே கூறுவதால் இது அவர்காலத்து நிகழ்ச்சியாதலே வேண்டும். எனவே, மூவேந்தரும் வடதிசையில் மொழிமாறுபட்ட நாடுகளை வென்றிருந்தனர் என்பது உறுதியாகிறது. ஆயினும், எக்காலத்து வென்றிருந்தனர் என்று ஆராய்வது நலம்பயக்கும். அசோகரது

கல்வெட்டுகளின்படி அவரது பேரரசுக்கு அப்பால் சோழர், பாண்டியர், சேரர்களும். சத்தியபுத்திரர்களுமே இருந்ததாகக் குறிப்பிட்டிருப்பதை அறிவோம்.

'...அதேபோன்று, தெற்கே சோழர், பாண்டியர் நாடுகளிலும், தாம்ரபர்ணி வரையிலும்...'

என்று, 13வது கற்பாறை ஆணையிலும் (Rock Edicts),

> 'கடவுளர் விரும்புபவனும், காட்சிக்கு இனியவனுமான மன்னன் நாட்டின் எல்லா இடங்களிலும், அடுத்துள்ள சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர், கேரளபுத்திரர் நாடுகளிலும், தாம்பபர்ணி வரையிலும் ... '

என்று, 2 வது கற்பாறை ஆணையிலும் குறிப்பிடுகிறார். வரிசை முறைப்படிக் கூறுவதால் அவரது எல்லைக்கு அப்பால் சோழநாடு இருந்தது என்று அறிகிறோம். அவரது கல்வெட்டுகள் கிடைத்த இடங்களின் அடிப்படையில் நெல்லூர்வரை பேரரசு நிலவியது என்று கருதலாம். ஆனால், அதற்கு அப்பாலும் இருந்த நிலப் பகுதிகள் பேரரசின் ஆட்சிச்செல்வாக்கு மண்டிலத்தில் இருந்திருக்க வேண்டும். பதின்மூன்றாவது கற்பாறை ஆணை பேரரசின் அமைப்பையும், தமிழகத்தின் அமைப்பையும் புவியியல் அடிப் படையில் விளக்குகின்றது. 'இங்கும், அதாவது தன் நாட்டில் ...... போஜர்கள், பிட்னிகர்கள், ஆந்திரர்கள், புஷந்தர்கள் வாழுமிடங் களிலும்...'' என்ற கல்வெட்டுப்பகுதி, நர்மதை-தபதி நதிப்பகுதியில் வாழ்ந்த போஜர்கள், மகாராட்டிரப்பகுதியில் இருந்த பிட்னிகர்கள், கோதாவரி-கிருஷ்ணா நதிகளுக்கு இடைப்பட்ட நாட்டினரான ஆந்திரர்கள் என்று கூறிச்சென்று கடைசியில் புலிந்தர் என்பவர் களைக் குறிப்பிடுகின்றது. எனவே இவர்கள் ஆந்திர நாட்டிற்குத்தெற்கே வாழ்ந்தவர்களாகலாம். தமிழகத்தின் அமைப்பையும் சோழர் அடுத்துப் பாண்டியர், சத்திய புத்திரர் அடுத்துக் கேரளபுத்திரர் என்று ஒரு அமைப்புடன் குறிப்பிடுவது, புலிந்தர் ஆந்திரத்துக்குத் தெற்கே வாழ்ந்தவர்கள் என்று எண்ண வைக்கிறது. அந்நாடு தமிழ் இலக்கியங்களில் புல்லிநாடு என்று குறிக்கப்படும் புல்லி மன்னனின் நாடாகலாம், வேங்கடமலைக்குரியவனான புல்லியையும் அவன் நாட்டையும்பற்றி மாமூலனார் சிறப்பாகப்பாடியுள்ளார் (அகம்-61, 295, 311, 395), அசோகரது அறச்செயல்கள் சிறப்புற்றிருந்த காலத்தில், வேங்கட மலைப்பகுதியில் வாழ்ந்திருந்த ஆதனுங்கன் என்ற அரசனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடிய பாடல் இங்கே குறிப்பிடத் தகுந்தது. இப்பாடலில் (புறம் - 175) மௌரியரது அறத்துறைச்

சிறப்பும், அதுபோல் ஆதனுங்களின் அறத்துறைச் சிறப்பும் ஒப்பிட்டுச் சிறப்பிக்கப்படுகிறது. எனவே, அசோகர் காலத்தில் வேங்கடமலைப் பகுதி மௌரியப் பேரரசின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது என்று கூறலாம். அசோகர், இதனாலேயே புலிந்தர் என்போர் தன்னாட்டின் பகுதியினர் என்று குறிப்பிட்டார் எனலாம். இதனால், வலிமை பெற்றுத் திகழ்ந்த அசோகரது பேரரசுக் காலத்தில் மூவேந்தரும் வடதிசை நாடுகளை வென்றிருந்தமைக்கு உரிய சான்றில்லை. ஆனால், மாமூலனார் குறிப்பிடும் அமைதிக் காலத்தில் — மௌரியப் பேரரசு சிதைந்த காலத்தில் — இதற்குரிய வாய்ப்பிருந்தது என்பதை வரலாறு உணர்த்துகிறது.

6: 3: மௌரியப் பேரரசு சிதைவுண்ட காலத்தை நாம் புரிந்து கொண்டால் மாமூலனார் கால மேல் எல்லையை ஓரளவு வரையறுக்கலாம். அவ நுடைய பாடல்களில் மௌரியப்படையெடுப்பு ஓய்ந்து அமைதி நிலவிய காலச்சூழல் உள்ளது. அந்த அமைதியைத் தமிழரசர்களது வடதிசை வெற்றிகள் மேலும் உறுதிப்படுத்தின அசோகர் காலம்வரை அத்தகைய வெற்றிக்கு வாய்ப்பில்லை என்று பார்த்தோம். ஆனால் அசோகர் மரணம் அடைந்த உடனேயே பேரரசு சிதைந்தது. அசோகர் கி. மு. 232-231 இல் மறைந்தார்[14] கி. மு. 230ல் பேரரசின் தெற்குப் பகுதியை ஆந்திர வழியினரான சாதவாகனர் கைப்பற்றி சிமுகன் என்பவன் தலைமையில்— அதே ஆண்டில்-மேற்குத்தக்காணத்தில் அரசமைத்தனர். பிரதிட்டானத்தை மையமாகக் கொண்டு அரசு இயங்கியது[15]. அதே நேரத்தில் கலிங்கம், விதர்ப்பம் போன்ற நாடுகளும் பிரிவுண்டன. எனவே கி. மு. 230 ஆம் ஆண்டுடன் தமிழகத்தை அச்சுறுத்திய மௌரியப் படையெடுப்பு இல்லாதொழிந்தது. புது அரசமைத்த சாதவாகனரது கவனமும் வடமேற்குத் தக்காணத்திலேயே இருந்தது. காரவேலன் தன் கல்வெட்டில் சாதவாகன சதகர்ணியின் அரசு தன்னாட்டிற்கு மேற்கில் இருந்தாகவே குறிப்பிடுகிறான். அவனது தமிழகப் படையெடுப்புப் பற்றிய செய்தியில் தெற்கே சாத்வாகன அரசு இருந்ததாகக் குறிப்பிடவில்லை. எனவே காரவேலனது காலம் வரை சாதவாகனர் தெற்கிலும், கடலோர ஆந்திரப்பகுதிகளிலும் கவனம் செலுத்தவில்லை என்று அறியலாம். எனவே, அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழரசர்கள் தமிழகத்துக்கு வடக்கே இருந்த நாடுகளைக் கைப்பற்றினராதல் வேண்டும். காரவேலனது கல்வெட்டில் அவனது தமிழகப் படையெடுப்பின்போது அவ மன்னர் என்பாரது (மன்னனது) பிதுண்டா (Pithunda) என்ற அரணைக் கைப்பற்றியது பற்றி மட்டுமே குறிக்கிறான்[16] :-

'... (Mamdam) Cha Ava raja-nivesidam pidudam gadha-bhanaglena kasayathi (,)

'[And in the 11th year (of his reign) ] (carring) with (him) gems and jewels (he) moves [in the Southern direction] in a slow procession and causes pithunda the abode of Ava Kings, to be ploughed by ploughs drawn by asses ;

'அவனது 11 வது ஆட்சியாண்டில், அணிமணிகளுடன் தெற்குத் திசையில் சென்று, அவமன்னர்களின் பிதுண்தா என்ற அரணை வென்று கழுதை ஏர் பூட்டி உழுது ...' என்று கூறும் கல்வெட்டு கலிங்கத்துக்கும் தமிழகத்துக்கும் இடையே அவ அல்லது அவா மன்னர்பற்றி மட்டுமே குறிப்பிடுகின்றது. இதனால், தமிழகத்துக்கு வடக்கே அப்படையெடுப்பு நடைபெற்ற கி. மு. 175 ஆண்டளவில் வேறு புகழ் மிக்க மன்னர் எவருமில்லை என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றது. இது, தமிழரசர்கள் வடதிசை நாடுகளை வென்று தங்கள் ஆட்சியில் வைத்திருந்தனர் என்றும், எனவே அவமன்னருடன் மோதிய காரவேலன் அடுத்து நேரடியாகப் பாண்டியருடன் போரிட்டான் என்ற கல்வெட்டு குறிப்பிடுவதுடன் பொருந்துகிறது என்றும் கூறலாம்.

6 : 4 : காரவேலன் கல்வெட்டுச் செய்திகளை மாமூலனார் உறுதி செய்வதுபோல, காரவேலனது கல்வெட்டு புலவர் மாமூலனாரது பாடற் செய்தியை உறுதி செய்வதைக் காண்கிறோம். தான் ஆட்சிப்பொறுப்பேற்றபோது, தனது ஆதிபத்திய உரிமை தமிழரசர்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருந்தது என்று கூறுகிறான். இதனைத் தவிர்க்கவே 'தன் ஆட்சியின் நலனுக்காக' அத்தமிழரசர்களது கூட்டிணைவை உடைத்ததாகத் தன் கல்வெட்டில் கூறுகிறான். 'இக்கூட்டிணைவு மௌரியருக்கு எதிராக எழுந்தது. காலப்போக்கில் அவனது நாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைந்ததால் அவன் தமிழ்நாட்டின் மீது படையெடுக்க நேர்ந்தது' என்று இதற்கு விளக்கம் கூறுகிறார் கலிங்க நாட்டினரான காரவேலனைப்பற்றிய புகழ்மிக்க ஆய்வாளர் பண்ட். சசிகாந்த் அவர்கள்,

'The contedaracy not only held its own aginst the Magadha imperialism under the Nandas, and Mauryas, but, in Course of time itself becam a danger. to it's neighbours. This is suggested by Kharavela motive in breaking it in his 11th regnal year'

என்று கூறுகிறார்.[17] தமிழரசர்களது ஒற்றுமையும், வடக்கே மொழி மாறுபட்ட நாடுகளை வென்றதால் தன் நாட்டினை நெருங்கி விட்ட போர் அச்சுறுத்தலும் காரவேலன் படையெடுப்பு முயற்சிக்கு காரணமாகும். காரவேலன் தமிழகத்தை வென்றதாகக் கூறிக் கொள்கிறான். மாமூலனார் பாடல்களிலோ மௌரியர் படை யெடுப்பைத் தவிர வேறு எவரது படையெடுப்பும் குறிப்பிடப்பட வில்லை. அதே சமயம் வடநாடுகளுக்குத் தமிழரசர்கள் மிக்க அச்சுறுத்தலாக விளங்கிய காலத்தில் பாடியுள்ளார். இதனை ஆராய்ந்து பார்த்தால், மாமூலனார் மௌரியப் பேரரசு சிதைவுற்ற கி. மு. 230க்குப் பின்னரும்; இதற்கு முன்பு குறித்தபடி தமிழக மன்னர்கள் வடநாட்டு மன்னர்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கிய, ஆனால் மன்னன் காரவேலனது கி மு. 175 ஆம் ஆண்டு படை யெடுப்பிற்கு முன்னர் வாழ்ந்தவராதல் வேண்டும். சில வரலாற்று ஆசிரியர்கள் இக்காலத்துக்கு நான்கு நூற்றாண்டுகள் பிற்பட்ட வராகக் கூறுவர்.[18] எவரும் 400 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து போன அரச மரபினரையும், நிகழ்ச்சிகளையும் பாடிக் கொண்டிருக்க மாட்டார்கள் எனவே இது ஏற்புடையதாகாது. மேலோட்டமான ஆய்வினால் பெறப்பட்ட தவறான கருத்தாகும்.

7 : வடநாட்டு நிகழ்ச்சிகளைப்போல், தமிழகத்தைப் பற்றியும் மாமுலனார் செய்திகளைத் தருகிறார். தமிழகத்து மன்னர் களிடையே நிலவிய முரண்பாடுகளையும் பூசல்களையும் அவர் குறிப்பிடுகிறார். இத்தகைய நிகழ்ச்சிகள் அவரது காலத்தை அறிந்து கொள்ள உதவிகின்றன,

7 : 1 : மௌரியப் படையெடுப்பு அச்சுறுத்தல் நீங்கியது தமிழக மன்னர்கள் தங்கள் உள்ளூர்ச் சிக்கல்களுக்குத் திரும்பினார் கள் வெளிச்செல்வாக்கிற்கு எதிரான ஒற்றுமைக் குலைந்ததால் பூசல்கள் முற்றின. நெடுஞ்சேரலாதன் - பெருவிறற்கிள்ளி போர் பெருஞ்சேரலாதன் - கரிகாலன் போர் போன்றவையும், இன்னும் வேறுபல மன்னர்கள் பற்றிப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனவும் இதிலடங்கும். கிபி. 230ல் மௌரியப் பேரரசு சிதைந்தபோது, தமிழக மன்னர்கள் கூட்டிணைவு தன்னுடைய வலிமையைத் திரட்டி, தென்னாட்டின் எல்லையை ஒட்டிய வேற்றுமொழி நாடுகளை வென்று கையகப்படுத்தி இருக்க வேண்டும். கி. மு. 298 முதல் 230 வரையிலான 68 ஆண்டுகள் பேரரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இந்தக் கூட்டிணைவு, இதன் மூலம் ஒரு வலிமையான ஒரு தற்காப்பு அரணை அமைத்துக் கொண்டது எனலாம். இதன் பிறகு மௌரியப் பேரரசு அச் சுறுத்தல் முற்றாக ஒழிந்து போனது. அதனால், கூட்டிணைவில்

அங்கம் வகித்தவர்கள் தங்கள் முரண்பாடுகளில் சிக்கிப் பூசல்களில் ஈடுபடலாயினர். ஒற்றுமை குறைந்து, கடைசியில் காரவேலன் படையெடுப்புடன் முற்றும் அழிந்துபோனது கூட்டிணைவு.

7: 2: தமிழக மன்னர்கள் இமயத்தை நோக்கிப் படையெடுத்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார். நெடுஞ்சேரலாதனுடைய இமயவெற்றி குறிப்பிடத் தகுந்தது,

'வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொ டாம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவன்
நிலந்தினத் துறந்த நிதியத் தன்ன'

(அகம், 127) என்று பாடுகிறார். இது போலவே, கரிகாலனை 'வடவர் வாட' என்று, அவன் வடநாட்டு படையெடுப்பினை பட்டினப்பாலை (வரி, 276) குறிப்பிடுகிறது. தமிழக அரசர்களின் இமயம் நோக்கியப் படையெடுப்பைக் குறித்து சில ஆசிரியர்கள் ஏளனமாக எழுதி வருகின்றனர்[19] காரவேலன் படையெடுப்பினை விதந்தோதும் இந்த ஆசிரியர்கள், அவன் கல்வெட்டின் மறு பக்கத்தைக் காணத் தவறுகின்றனர். காரவேலன் தன் தமிழகப் படையெடுப்பிற்குக் கூறும் காரணம்தான் அது. நாம் முன்பே அது பற்றி விரிவாகப் பார்த்திருக்கிறோம். தன் கல்வெட்டிலேயே தன் நாட்டின்-தன் ஆட்சியின் நன்மை கருதியே தமிழக மன்னர் கூட்டிணைவை உடைத்ததாகக் கூறி இருக்கிறான். தமிழ் மன்னரது வலிமை தனக்கும் தன் நாட்டிற்கும் அச்சுறுத்தலாக அமைந்தது என்று கூறுகிறான். எனவே, தமிழரசர் தன்நாட்டின் மீது படையெடுக்கும் வாய்ப்பினைத் தவிர்ப்பதற்காகவே அவன் படையெடுத்தான் எனலாம். தமிழ் மன்னர்கள் இமயம் நோக்கிப் படையெடுத்ததாலேயே, காரவேலன் தான் ஆட்சி ஏற்றதும் மீண்டும் படையெடுக்கும் வாய்ப்பினைக் கருதி அஞ்சி இருக்க வேண்டும். கி. மு. 175ல் காரவேலன் அரசெய்திய பிறகு படையெடுப்பு நிகழவில்லை என்று பார்த்தோம்; படையெடுப்பு அச்சுறுத்தல் மட்டுமே இருந்தது. அதற்கு முன் படையெடுப்பு வாய்ப்பிருந்ததா என்று காண்போம்.

7: 3; கி. மு. 232ல் அசோகர் மரணமடைந்த பிறகு மௌரியப் பேரரசு சுமார் 50 ஆண்டுகளே-அதாவது கி. மு. 188

வரை நீடித்திருந்தது. அசோகருக்குப் பின் பேரரசை அவரது சந்ததியினர் பங்கிட்டுக் கொண்டனர்.[20] மேற்குப்பகுதி குணாளனுக்கும், தலைநகர் பாடலிபுத்திரத்துடனான கிழக்குப் பகுதி சம்பிரதி அல்லது தசரதனின் ஆட்சிக்கு உட்பட்டது. முன் பின்னாக சப்பிரதி, தசரதன் இருவரும் 9 + 8 = 17 ஆண்டுகள், அதாவது கி. மு 215 வரையில் ஆண்டனர். அதன் பின் வலிமையற்ற மன்னர்களின் ஆட்சியே நிலவியது. இதனை கி மு. 188 ஆம் ஆண்டிற்குப் பிறகு நடந்த பாக்டீரியா கிரேக்கரது படையெடுப்பு உறுதி செய்கிறது. எனவே கி. மு. 215 க்கும் - கி மு. 185க்கும் இடைப்பட்ட 30 ஆண்டுகள் தமிழக மன்னர்களின் இமயப் படையெடுப்பிற்கு ஏற்ற காலமாகக் கருதலாம். இக்காலத்திலேயே நெடுஞ்சேரலாதனது இமயப்படையெடுப்பு நடந்திருக்க வேண்டும்.

7:4: மேற்கூறிய காலமுறைகளும், அவற்றிற்கான பாடற் செய்திகளும் பொருத்தமாகவே அமைகின்றன. அவரால் பாடப்பட்ட சேர மன்னர்களின் வரிசை முறைப்படி நோக்கினால் அவர் பல்யானைச் செல்கெழு குட்டுவன் காலத்தில் இறந்திருக்க வேண்டும். அவன் அகப்பாவை இழந்தபின் இறந்திருக்க வேண்டும் என்பதைக் கருதி அவர் அவனது 20வது ஆட்சியாண்டளவில் இறந்திருக்கலாம் என்றும் பார்த்தோம். காரவேலன் கல்வெட்டுடன் பொருந்துவதும் மாமூலனார் பாடலில் காணப்படும் தமிழரசர் கூட்டிணைவின் வடநாட்டு வெற்றிகளால் காரவேலனுக்கு அச்சுறுத்தல் நிலவியதுமான ஒரு காலப்பகுதிகளில் அவர் இறந்திருக்க வேண்டும். அசோகர் இறந்தபின் கி. மு. 230க்குப் பிறகும் பாடலிபுத்திரத்தில் தசரதன் சம்பிரதி ஆகியோர் ஆண்ட கி. மு. 215க்கு முன்பும், தமிழரசர்கள் பேரரசு சிதைவுற்றதைக் காரணமாகக் கொண்டு தமிழகத்தின் வடஎல்லை நாடுகளை வென்றிருக்க வேண்டும். இத்தகைய ஒற்றுமை குலைந்து போவதற்கு ஏறத்தாழ ஒரு தலைமுறை காலம் ஆகும். இதனை 30 ஆண்டுகள் என்பதாகக் கொண்டால், மௌரிய அரசர்கள் முற்றும் வலிமை இழந்து போன கி. மு. 215ஆம் ஆண்டினை அடிப்படையாக கெயண்டு, கி. மு. 185 அளவில் மாமூலனார் இறந்தார் என்று கொள்ளலாம். கரிகாலன் நெடுஞ்சேரலாதன் போன்று ஒற்றுமையை நிலைநாட்டக் கூடிய ஆற்றல் பெற்ற மன்னர்கள் இல்லாத நிலையில்' உட்பூசலால் வலிமையும், ஒற்றுமையும் குறைந்து வரும் நிலையில், பல்யானைச் செல்கெழு குட்டுவன் காலத்தில் இறந்திருக்க வேண்டும். எனவே அவர் இறந்தது கி. மு. 185 அளவில் என்று முடிவு கூறலாம்.

7:5: அவரது காலக்கீழெல்லை கி; மு 185 எனலாம். மாமூலனார் நிறைவாழ்வு வாழ்ந்து தமிழ்ப்பணியாற்றியவர் என்று

கொண்டு ஏறத்தாழ 70 வயது வரை வாழ்ந்ததாக மதிப்பிடலாம். இதன்படி அவர் கி மு, 255 அளவில் தோன்றியவராதல் வேண்டும் அவர் மௌரியரது போர்ச் செயல்களை குறிப்பிட்டு, அவர்களது, அறப்பணிகளைக் குறிப்பிடாதது ஏன் என்ற கேள்விக்கும் இதனால் பதில் கிடைக்கிறது, போர் நினைவுகள் மக்கள் நெஞ்சில் நெடுங் காலம் நீடிக்கின்றன. அவரது இளம்பருவத்திலேயே அசோகரது அறப்பணிகள் குறுகிய காலமே நீடித்து-ஏறத்தாழ 30 ஆண்டுகள் அவர் தமிழ்ப்பணித் தொடங்கிய காலத்திற்குள் அழிந்து போயிருக்க வேண்டும். மேலும் இளம்பருவம் கழித்தும் மீண்டும் வடதிசை நோக்கி தமிழரசர் படையெடுப்புகள் தொடங்கி விட்ட தால் (கி. மு. 230) மக்கள் நெஞ்சில் போர் உணர்வு தலை தூக்கியது. அதனால் மௌரிய போர் நினைவுகள் மீண்டும் நினைவூட்டப் பட்டிருக்கும். தொடர்ந்து தமிழகம் உட்பூசலில் சிக்கி போர் ஒரு வாடிக்கையான நிகழ்ச்சி என்றாகிவிட்டது. இத்தகைய சமுதாய சூழ்நிலையில்தான் புலவர் மாமூலனாரது பாடல்களைக் காண வேண்டும்.

8 : இக்கால அடிப்படையில், அவர் கால மன்னர்களுடைய காலத்தை அமைக்கலாம். இங்கு ஒரு அரசனது முழு ஆட்சிக் காலம் சராசரியாக 30 ஆண்டுகள் என்ற அடிப்படையில் நிர்ண யிக்கப்படுகிறது. மாமூலனாரது காலமும் வரலாற்றுச் சூழலுடன் பொருத்தி ஆராய்ந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஆண்டுகள் வேறுபடலாம்; ஆனால் அவர் 3 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி 50 ஆண்டுகளிலும் வாழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை.

8 : 1 : மாமூலனார் பல்யானைச் செல்கெழு குட்டுவனுடைய 20வது ஆட்சியாண்டளவில் மரணம் அடைந்தவர் என்பதாகப் பார்த்தோம். அவரது மரண காலம் = குட்டுவனது 20வது ஆட்சி யாண்டு என்பது கி. மு 185 ஆகும். இக்குட்டுவன் 25 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக பதிற்றுப்பத்தின் பதிகம் கூறுகிறது. இதன்படி அவனது ஆட்சி முடிவு கி. மு 180 ஆகும். இதன்படி (திருத்தமற்ற படி)

| | | |
|---|---|---|
| 1. | ப. செ. குட்டுவன் மரணம் | — கி. மு. 180 |
| | முடிசூடியது | — கி. மு. 205 |
| 2. | நெடுஞ்சேரலாதன் மரணம் | — கி. மு. 205 |
| | முடிசூடியது | — கி. மு. 235 |
| 3. | பெருஞ்சேரலாதன் மரணம் | — கி. மு. 235 |
| | முடிசூடியது | — கி. மு. 245 |
| 4. | உதியஞ்சேரலாதன் மரணம் | — கி. மு. 245 |
| | முடிசூடியது | — கி, மு. 275 |

இக்கால அடிப்படையில் சேர-சோழ மன்னர் கால ஒப்பியல் :-

1. நெடுஞ்சேரலாதன் மரணம் — கி. மு. 205 ←
முடிசூட்டியது — கி. மு. 235
2. பெருஞ்சேரலாதன் மரணம் — கி. மு. 235
முடிசூடியது — கி. மு 245 →30
1. கரிகாலன் முடிசூடியது — கி. மு. 245
மரணம் — கி. மு. 205
2. பெருவிறற்கிள்ளி முடிசூடியடி — கி. மு. 205
மரணம் — கி. மு. 175 ←

கரிகாலன் இளம்பருவத்திலேயே வெண்ணிப்போரில் பெருஞ் சேரலை வென்றான் என்ற பொருநராற்றுப்படை (வரிகள் : 129 - 148 வரை) விளக்கத்தின் அடிப்படையில், பெருஞ்சேரல் மரணமும், கரிகாலன் முடிசூடலும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பீட்டுக் கணித முறையில் ஒரு முரண்பாடு தெரிகிறது. ஒரே போர்க்களத்தில் இறந்தவர்கள் நெடுஞ்சேரலாதனும் பெருவிறற் கிள்ளியும். கணிப்பில் 205, 175 என்று மாறுபட்டு 30 ஆண்டுகள் வேறுபாடு தோன்றுகிறது. ஒப்பீட்டுமுறைக்கேற்ற இடைவெளி வந்தாலும், அவர்களுடைய அமைப்பில் ஒரு முரண்பாடு இருப்பது உறுதி. இனி, பதிற்றுப்பத்து அடிப்படையில் நெடுஞ்சேரலாதன் காலத்தை (58 ஆண்டுகள்) அமைப்போம்

1. ப செ குட்டுவன் மரணம் — கி. மு. 180
முடிசூடியது — கி. மு. 205
2. நெடுஞ்சேரலாதன் மரணம் — கி. மு. 205 ←
முடிசூடியது — கி. மு. 263
3. பெருஞ்சேரலாதன் மரணம் — கி மு. 263
1. கரிகால்வளவன் முடிசூடியது — கி. மு. 263 →2
மரணம் — கி. மு. 233
2. பெருவிறற் கிள்ளி முடிசூடியது — கி. மு. 233
மரணம் — கி. மு. 205 →

இங்கும் 2 ஆண்டுகள் வேறுபாடு உள்ளது. ஆனால், இவ்வேறுபாடு சராசரியில் ஏற்பட்ட முரண்பாட்டால் வந்தது. எனவே இந்த 2 ஆண்டுகளை இயல்பாக மரணம் எய்திய கரிகால்வளவனுக்கு அளித்து, போரில் மரணமடைந்த பெருவிறற் கிள்ளியின் காலத்தில் அதனைக் குறைக்கலாம். இதன்படி,

1. கரிகால்வளவன் முடிசூடியது — கி. மு. 263
மரணம் — கி. மு. 233
2. பெருவிறற்கிள்ளி முடிசூடியது — கி. மு. 233
மரணம் — கி. மு. 205

8 : 2 : இக்கால அடிப்படையில் சில அரசர்களது கால அளவுகள் :

1. ப. செ. குட்டுவன் — கி. மு. 205 — 180
2. நெடுஞ்சேரலாதன் — கி. மு 263 — 205
3. பெருஞ்சேரலாதன் — கி. மு. 273 — 263
4. உதியஞ்சேரலாதன் — கி. மு. 303 — 273
1. கரிகால் வளவன் — கி. மு 263 — 233
2. பெருவிறற்கிள்ளி — கி. மு. 233 — 205.

8 : 3 : மேற்கண்ட அரசர்களது கால அடிப்படையில், சங்க கால அரசர்களது ஆட்சிக்காலத்தை ஓரளவு நிறுவலாம். சேர மன்னர் காலத்தைப் பதிற்றுப்பத்தின் பதிக அடிப்படையில் அமைத்துப் பார்க்கலாம் பதிற்றுப்பத்து மன்னர்கள் அனைவரும் சிற்றரசர்களோ, ஒரே சமயத்தில் ஆண்டவர்களோ அல்ல. இவர்களில் ஒரு சிலரைப் பாடிய புலவர்கள் காலத்தில் வேறு சில சேர மன்னர்களும் வாழ்ந்துள்ளனர். எடுத்துக்காட்டு : பரணர் இவர் நெடுஞ்சேரலாதனைப் போர்களத்தில் பாடியுள்ளார். பிறகு அவன் மகன் எனப்படும் கடலோட்டிய வேல்கெழு குட்டுவனையும் பாடியுள்ளார். ஆனால், பரணரைப் பொதுவாக இவ்வேல்கெழு குட்டுவன் காலத்தினராகவே கொள்ள வேண்டும். அப்போது குட்டுவனைவிட பரணர் சற்றே வயதில் மூத்தவராக இருந்து இருக்க வேண்டும். அதுபோல், கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதன் காலத்தவர். பெருங்குன்றூர் கிழார் இளஞ்சேரல் இரும்பொறையின் காலத்தவர். தன்பாடலில் பிற மன்னர்களை இளஞ்சேரலின் முன்னோர்களாக (பதிற்று : 8, 10 வது பாடல்கள்) இப்புலவர் குறிப்பது இக்கருத்தை உறுதி செய்கிறது. இவரது பாடல்களில் குறிக்கப்படும் முன்னோர்கள் அனைவருமே பதிற்றுப்பத்தில் காணலாகும் மன்னர்களே. எனவே, இவர்கள் வழிவழியாக ஆண்ட பேரரசர்களே என்றும், இவர்களுக்குப் பின்னரே சங்க இலக்கியம் காட்டும் பிற சேரமன்னர்கள் கொண்டிருக்க வேண்டும். பெருங்குன்றூர் கிழார் பதிற்றுப்பத்தில் இல்லாத மாந்தரஞ்சேரலையும் முன்னோனாகப் போற்றுகின்றார் (10 வது பாடல்) இம்மாந்தரஞ் சேரல்-யானைகட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை எனப்படுவான் என்றும், இப்போது

கிடைக்காது போன 10 வது பத்து இவனைப்பற்றியதே என்றும் அறிஞர் கூறுவர். இவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுடன் போரிட்டவன் 'என்பர். கபிலன் இன்றுளனாயின் நன்றுமன்' என்று தன்னிடம் கூறியதாக பொருந்தில் இளங்கீரனார் பாடிய பாடலால் (புறம் 53) இவன் கபிலருக்குப் பின்னும் வாழ்ந்தவன் என்று அறிகிறோம். எனவே, இவன் செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு அடுத்து ஆண்டவன் என்று உணரலாம். (இம்முறைபற்றியே இப்பட்டியில் இவனை வாழியாதனுக்கு அடுத்து வைத்துள்ளேன்). இதனால் பதிற்றுப் பத்து மன்னர்களை அடுத்தடுத்து ஆண்டவர்களாகக் கொண்டு மாமூலனார் கால அடிப்படையில் அமைக்கலாம்.

8 : 4 : இக்கால அமைப்பினைச் சான்றோர் ஒப்பாது தள்ளுவரே யாயினும், இதனை ஒரு புதிய முயற்சி என்ற அளவிலேனும் ஏற்குமாறு வேண்டுகிறேன். அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் பதிற்றுப்பத்து பதிகம்கூறும் ஆட்சி யாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | (உதியஞ்சேரலாதன் | கி. மு. 303-273) | |
| 2. | பெருஞ்சேரலாதன் | கி. மு. 273-263 | |
| 3. | நெடுஞ்சேரலாதன் | கி. மு 263-205 | [58] |
| 4. | ப. செ. குட்டுவன் | கி மு. 205-180 | [25] |
| 5. | க. க நார்முடிச்சேரல் | கி. மு. 180-155 | [25] |
| 6. | க வே. கெ. குட்டுவன் | கி மு. 155-100 | [55] |
| 7. | ஆ. கோ. சேரலாதன் | கி. மு. 100-62 | [38] |
| 8. | செ. க வாழியாதன் | கி. மு. 62-37 | [25] |
| 9. | [யா. மா. சே. இரும்பொறை | கி. மு. 37-7] | |
| 10. | த. எ. பெ. இரும்பொறை | கி. மு. 7-10 கி. பி | [17] |
| 11. | இளஞ்சேரல் இரும்பொறை | கி. பி. 10-26 | [16] |

[இங்கே, மாந்தரஞ்சேரல்போல் உதியஞ்சேரலாதனும் பட்டியில் முதல்வனாக சேர்க்கப்பட்டுள்ளான்] இப்பட்டியில் குறிப்பிடத் தகுந்த ஒரு செய்தி உண்டு. மாந்தரஞ்சேரல் கி. மு. 7 இல் இறந்தான் என்று என்னுடைய கட்டுரை ஒன்றில் முன்பு விளக்கியுள்ளேன். தமிழ்ப்பொழிலில் வெளியான அக்கட்டுரையில், கூடலூர் கிழார் பாடிய ஒரு பாடற் கருத்துக்களையும் [புறம், 229] இங்கிலாந்து நாட்டு ஆய்வாளர்களது வானியல் ஆய்வுக் கருத்து ஒப்பிட்டு ஆய்வு செய்திருந்தேன்.[21] இக்கட்டுரைக்காக, மாமூலனார் கால அடிப்படையில் பதிற்றுப்பத்து மன்னர்களது காலத்தை அமைத்து வருகையில் இம்மன்னனது காலம் வரலாற்று அடிப்படையிலான அக்காலத்துடன் இயல்பாகப் பொருந்தி வருவதைக் கண்டு என்றும் இல்லா அளவு பேருவகை கொண்டேன். அடுத்து, சேரமன்னர் வரிசையில் ஆதன், குட்டுவன், இரும்பொறை என்பன

பொதுப் பெயர்களாக அல்லாது, 3 தனித்தனி மரபினர்-அல்லது அரச குடும்பத்தினர் என்று கொள்ளலாமா என்று அறிஞர் ஆராய வேண்டும். ஆதனுடைய மகன் குட்டுவனாகவோ, இரும்பொறையாகவோ இருக்க இயலுமா என்பதையும் ஆராயவேண்டும். 3 குடும்பத்தினர் மாறிமாறி ஆண்டனர் என்று கருதுவது ஏற்புடையதாக இருக்கும் என்பது எனது தாழ்மையானகருத்தாகும்.

9 : இந்த ஆய்வினால் வடநாட்டில் பிந்துசாரர், அசோகர் போன்ற பேரரசர்கள் வாழ்ந்தபோது, தமிழகத்தில் உதியஞ்சேரலாதன், பெருஞ்சேரலாதன், நெடுஞ்சேரலாதன், கரிகால் வளவன் போன்ற அரசர்கள் வாழ்ந்தனர் என்று அறிகிறோம். இத்தகைய மன்னர்கள் இருந்ததாலேயே மௌரியப்படையெடுப்புத் தோல்வியைத் தழுவி இருக்கவேண்டும். பாண்டியர் முதலான தமிழரசர்கள் அக்காலத்தில் வடநாட்டினருக்கு நன்கு அறிமுகமாகி இருந்தனர் என்பதை சந்திரகுப்தர் காலத்தில் எழுதப்பட்ட தூதர் மெகஸ்தனீஸின் இன்டிகா, கவுடில்யரின் அர்த்தசாத்திரம் போன்ற நூல்களால் அறிகிறோம். எனவே இக்காலப் பாண்டிய மன்னர்களைப்பற்றியும் ஆராய வேண்டும். இத்தகைய அரிய வரலாற்றுப் பாடல்களைத் தந்த மாமூலனாருக்குத் தமிழகம் பெரிதும் நன்றிக் கடன் பெற்றுள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. அகநானூறு — 91 பாடல் பதவுரை — ந. மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு. ரா. வேங்கடாசலம்பிள்ளை, பாகனேரி, — 1965, பக். 213.
2. அதே நூல் — 281. பாடல் பதவுரை, பக். 337.
3. Romila Thapar — Asoka and the decline of the Mauryas, 1973, P. 16.
4. Prof. R. Sathianathaier, History of India, vol. I P. 169 Map.
5. G. M. Bongard — Levin — Mauryan India, 1985, p. 275.
6. Ibid — P. 276
7. மதுரைக் காஞ்சி — வரிகள் 507—510
8. அதே நூல் — வரி. 507,
9. அகநானூறு — பாடல். 113.

10. Dr. S. Krishnaswamy Aiyangar commemoration vol. P. 47
11. B. ch. Law, The Magathas in Ancient India, London, 1946, PP. 16-17.
12. G. Dunbar — A History of India, London. 1936, P. 48.
13. Dr Shashi kant, Kharavela and Asoka, 1971, P. 36.
14. G.M. Bongard—Levin, Mauryan India. P. 90.
15. K. A. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, 1973, ப. 149.
16. Dr Shashi Kant, Kharavela and Asoka, 1971- P. 36.
17. 1 bid — P. 36,
18. K. A நீலகண்டசாஸ்திரி, அதே நூல் பக். 142.
19. Ibid - P. 189.
20. G. M. Bongard - Levin, Mauryan India, 1985, P. 97
21. பூரண சந்திர ஜீவா, கடைச்சங்கம் : கால ஆராய்ச்சி ஒரு புதியசான்று, தமிழ்ப்பொழில், 1980, துணர் 54, மலர். 3,4.

# கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு

இரா. பாக்கியலட்சுமி
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

## 1. முகவுரை

மனித வாழ்க்கையின் இன்றியமையாத அங்கமாகிய மொழியினைக் கொண்டு ஒருவர் தன் கருத்துக்களை மற்றவருடன் பகிர்ந்து கொள்ள முடிகிறது. சில நேரங்களில் நாம் மொழி வாயிலாக ஒரு செய்தியினை வெளிப்படுத்தும் போது அதனைப் பலர் பல விதமாகப் புரிந்து கொள்ளும் நிலையில்தான் மொழியின் ஆற்றல் (linguistic efficiency) நமக்குத் தெளிவாகின்றது. பல சொற்கள் இலக்கண நியதியுடன் ஒன்று சேர்ந்து ஒரு தொடராக அமைகின்றது. வாக்கியங்களின் அமைப்பானது மொழிக்கு மொழி மாறுபடலாம். ஒரு வாக்கியத்தில் சொற்கள் மட்டும் இடம் மாறின் வழுஉத் தொடர்கள் ஏற்படும். சொற்றொடர்களில் பொருள் மாறுபாடு ஏற்படா வகையில் சொற்களை இடமாற்றம் செய்ய முடியும். கல்வெட்டுத் தமிழில் காணப்படும் தொடரியல் அமைப்பின் சிறப்புக் கூறுகளைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கம். கர்நாடக மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சிலவற்றிலிருந்து எடுக்கப்பட்ட தொடர்களே இவ்வாய்விற்கான தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வு தொடரியல் விளக்கத்திற்காக மாற்றிலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படையில் அணுகப்பட்டு, கல்வெட்டுத் தமிழின் தொடரியல் அமைப்பை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் குறிப்பிடத்தக்க நோக்கமாகும்.

## 2. தொடரமைப்பு விளக்கம்

சொற்றொடர்கள் பல வகைப்படும். அவையாவன :

1. எழுவாய் செயப்படுபொருள், பயனிலை என்ற கூறுகள் கொண்ட பெரும்பான்மைத் தொடர்கள் ;
2. வரிசைமுறை முரண்தொடர்கள் ;
3. முன்னிலைப் படுத்தும் தொடர்கள் ;
4. பலவாக்கியங்களை உள்ளடக்கிய தொடர்கள் ;
5. பொருள் மயக்கம் தரும் தொடர்கள் ;

6. விடுபட்ட சொற்களைக் கொண்ட தொடர்கள் ;
7. பெரும்பான்மை, வரிசை முறையில் செய்திகளைக் கொடுக்கும் தொடர்கள் ;

## 2.1. பெரும்பான்மைத் தொடர்கள்

பெரும்பான்மைத் தொடர்கள் எனப்படுபவை பெயர், செயப்படு பொருள், வினை என்ற **பொது வரிசை** (general pattern) முறையிலேயே அமைந்திருக்கின்றன.

அ] "சங்க நாயகத்தேவன் ஏரிகட்டி பயிருடன்
தேவதான சந்திராதித்தவரை செல்வதாகவிட்டேன்"
[Srinivasapur 8]

என்ற இத்தொடரில் பெயர்த்தொடர் முதலிலும் செயப்படுபொருள் இடையிலும் வினை இறுதியிலும் அமைந்துள்ளன. **சங்காயகத்தேவன்** என்ற எழுவாய் **விட்டேன்** என்ற பயனிலைச் சொல்கொண்டு முடிகின்றது. இதன் மூலம் இத்தொடர் தன்மைப் படுத்திக் கூறப்படுகின்ற முறையும் தெரிகிறது. செயப்படுபொருள் இரண்டிற்கும் இடையில் அமைந்துள்ளது.

ஆ] "சானாண்டை ரிஷப தேவரை பிரதிஷ்டை
பண்ணுவித்தான்" [Cintamani Ta]

என்ற இவ்வெடுத்துக்காட்டு எழுவாய், செயப்படுபொருள், வினைப் பயனிலை என்ற வரிசை முறையில் காரணவினையில் முடியும் வண்ணம் அமைந்துள்ளது. இத்தொடரின் 'பயனிலை' படக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 2. 2 வரிசைமுறை முரண் தொடர்வகைகள்

பெயர், செயப்படுபொருள், வினை என்ற வரிசையில்லாத முரண் தொடர்கள் கல்வெட்டுக்களில் அதிகமாகக் காணப்படு கின்றன. எடுத்துக்காட்டாக.

"பாலாண்டை நாயன் கங்கேஸ்வரமுடையாற்கு திருநந்தா
விளக்கும்
காலச்சந்தி அமுது படிக்குமாக பெரியேரி முதல் முடையில்
கண்டக் கழனியும் கண்டகக் கொல்லையும் விட்டமைத்த
பாலாண்டை நாயன் தர்மம்"
[Malur 98]

என்ற இக்கல்வெட்டுத் தொடரில் எழுவாய் முதலில் இருந்தாலும் செயப்படுபொருளுடனும் பெயர் வந்திருக்கிறது. **தர்மத்திற்கே,**

பாலண்டை நாயன் தர்மம் என்று பெயரடையாக வந்திருக்கின்றது. மேலும், இங்கு பயனிலை என்பது இல்லை. இதனை நாமே ஊகித்துணரும் முறையில் தொடர் அமைக்கப்பட்டுள்ளது.

"உடையார் பெங்கீஸ்வரமுடைய நாயனாற்கு
முதலியார் இளவஞ்சியாரான கூத்தாடுந் தேவன்
பெரிய ஏரியில் உதகபூர்வமாகத் தந்த 8" [Mulbagal, 179]

என்ற இவ்வெடுத்துக்காட்டு எண்ணுப்பெயரில் முடிவு பெறுகின்றது. நிலம்-8 என்று கூறிய பிறகு அதன் அளவையைக் காணி, அல்லது உரி என்ற முறையில் குறிப்பிடாது எண்ணுப் பெயரில் முடியும் இத்தொடர் வழூஉத் தொடர் ஆகும். மேலும், இங்கு பயனிலை இன்றியே தொடர் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

"ஸ்வஸ்திஸ்ரீ சிறிய மழவூரிலிருக்கும் வியாபாரி
கழுமலமுடையான் சீவவனன் வடுகப்பன்
செய்வித்த தூம்பும் தொட்டியும்" [Channapatra, 35]

"சாத்தனூர் பாலன் கௌண்டஎ்ய கோத்திரத்து
விஜயநாத வீரசோழ ப்ரம்ம மாராயன் புதுக்குவித்த
க்ஷேத்ர பாலந் மண்டபமும் பீடமும்" [Kolar 43]

மேற்கூறப்பட்ட இவ்விரண்டு கல்வெட்டுத் தொடர்களிலும் செயப்படு பொருளானது உம்மைத்தொகையாக முடிவு பெற்றிருக்கின்றன. தொடர்கள் உம்மைத் தொகையில் முடிவு பெறுவது வழூஉத் தொடர்களாகும். இவற்றை மரபு மாறிய தொடர்கள் எனலாம். இத்தொடர்களில் பிறவினைச் சொற்களைத் தொடர்ந்து உம்மைத்தொகைச் சொற்கள் வருகின்றன. பிறவினைச் சொற்கள் இங்கு எச்சங்களாக வருவதனால் இத்தொடர்கள் வழூஉத் தொடர்களே.

## 2. 3 முன்னிலைப் படுத்தும் தொடர்கள் :

முன்னிலைப்படுத்துதல் என்றால் ஒரு செயலை ஒருவன் செய்வித்தான் அல்லது ஒருவனால் செய்விக்கப்பட்டது என்றுகூறி செய்தவனைக்கூறும் மரபாகும். இங்கு ஒரு செயலைச் செய்வித்தவன் அச்செயலை செய்தவனுக்குக் கொடுத்த சிறப்பாக இதனைக் கொள்ளலாம். முன்னிலைப் படுத்தும் தொடர்கள் காரண வினை கொண்டு முடிவு பெறுகின்றன. அடுத்த தொடர்கள் வினையணையும் பெயரினைச் சிறப்பிக்கவும் செயப்படு பொருளை முன்னிலைப்படுத்தவும் கூறப்படுகின்றன எனலாம்.

" சானாண்டை ரிஷப தேவரை பிரதிஷ்டை
பண்ணுவித்தான். மண்ணினவன் இராசாசாரி
பேரன் பெருமாப்பிள்ளை " [Cintamani, 85]

என்ற இவ்வெடுத்துக் காட்டில் பெயர் முதலிலும் செயப்படு பொருள் இடையிலும் காரண வினை இறுதியிலும் வழங்குகின்றன. பிறவினையில் முடிந்த சொல் அடுத்த அடியில் வினையாலணையும் பெயரில் [Participial nown] துவங்குகிறது. இராசாசாரி என்பவன் இலக்கணங்களால் குறையாத வகையில் சிலை செய்வதில் வல்லவர் இங்கு செய்தவனைத் தனியாகச் சிறப்பிக்க வேண்டியும், அவன் குடும்பமே காலம் காலமாகப் புகழ்பெற்ற நிலையினைக் காட்டுவதற்காகவும் தனியாக ஒரு தொடர் அமைக்கப்பட்டுள்ளது எனலாம். மேலும் செய்திகளை எழுதி வைத்துக்கொண்டு வெட்டும் பழக்கமும் இல்லையாதலாலும் செய்திகளை மனத்தில் வாங்கிக்கொண்டு வெட்டும்போது இந்நிலை ஏற்படுகின்றது என்று கூறவும் முடியாது. காரணம் இது போன்ற பிறவினையில் முடியும் வேறு தொடர்கள் ஒருவனின் அல்லது ஒரு செயலின் சிறப்பினைக் காட்ட நினைத்தால் வினையாலணையும் பெயரில் அடுத்த அடியில் தொடர்கின்ற நிலை காணப்படுகின்றது.

" ஸ்வஸ்திஸ்ரீ இத்திரு முற்றம் செய்வித்தஎன்
காரிகுடி உலக முண்டான் மகன் கூத்தாண்டி
தண்ட நாயகன். இத்திரு முற்றம் தில்லைக்
கூத்த விண்ணகர்'[1] (Srirangapatna, 58)

என்ற இத்தொடரில் பயனிலை இடையிலும் காரண வினையாகவும், எழுவாய் கொண்டு முடிந்த மரபு மாறிய தொடராக இருப்பினும் இது வழூஉத் தொடரல்ல. தில்லைக் கூத்தரின் சிறப்பினை முன்னிலைப்படுத்த அடுத்த தொடரினை இங்குக் கொடுத்திருக்கிறார்கள் எனலாம். மேலும், இத்தொடரில் தில்லைக்கூத்த விண்ணகரத்தை செய்தவன் பெயரினை இங்கு கூறவில்லை. இதன் மூலம் தலச்சிறப்பிற்காகவே இத்தகைய சொற்றொடர்களை அமைத்திருக்கிறார்கள். என்பதனை நாம் அறிதியிட்டுக் கூறலாம்.

## 2. 4 பல வாக்கியங்கடை உண்டாக்கிய தொடர்கள்

கல்வெட்டுத் தொடரில் பெயர்ப் பயனிலையின் முன்னர்ப் பல பெயரடைகள் வருகின்ற முறை காணப்படுகின்றது. இப் பெயரடைகளின் இடையில் பல வாக்கியங்கள் புதைந்துள்ளன (embedded sentences). இது போன்று செயப்படுபொருள்

பயனிலை என்ற ஒவ்வொன்றிற்கு முன்னும் பல அடைகள் வந்தமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டாக,

> "ஸ்வஸ்திஸ்ரீ சகரையாண்டு 1198 ஆம் ஆண்டான தாது வருஷத்து மகர ரவி 28ந்தியதி ஞாயிற்றுக் கிழமையும், பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் மிருகசீரிஷமு மான இற்றைநாள் ஜயங்கொண்ட சோழ இளவஞ்சி ராயர் முதலிகளில் பொன்னப்பிளை மகன், அம்மான் வயிராண்டை பிரதிஷ்டித்த நாயனார் பெங்கீஸ்வர முடையார்க்கு சிறு காலைச் சந்தி அமுது செய்தருளு வதாக கல்ப்பள்ளி மடுவில், என் குட்டையில் கழனியில், முக்கண்டகக் கழனி தேவதானமாக சந்திராதித்தவரை செல்வதாக விட்டேன் தனிமை நீக்கினாரென".

(Mulbagal, 184)

என்ற இக்க வெட்டுத் தொடரில் எழுவாய் மறைந்துள்ளது. (அதாவது வெளிப் படையாகச் சொல்லப்படவில்லை) இதைத் **தோன்றா எழுவாயாக** நாம் உணர முடியும். இங்கு தனிமை நீக்கினார் என்ற பெயருக்கு முன்னர்ப்பல தொடர்கள் மறைந்துள்ளன. அம்மான் வயிராண்டை என்பவர் பொன்னப் பிளையின் மகன். பொன்னப்பிளை என்பவர் ஜயங்கொண்ட சோழ அரசனின் இளவஞ்சியராயர் முதலிகளில் ஒருவன். முதலி என்பது ஒரு பட்டத்தின் பெயர். இளஞ்சியராயர் என்பதும் ஒரு பட்டத்தின் பெயர். அம்மான் வயிராண்டை என்பவன் தெய்வத்தைப் பிரதிஷ்டை பண்ணுவித்தான். இத்தெய்வம் நாயனார். இவர் பெங்கீஸ்வரம் என்ற கோயிலில் குடிகொண்டவர் அதனால் பெங்கீஸ்வரமுடைய நாயனார் என்று பெயர் பெற்றவர். இத்தெய்வத்திற்குத் தனிமை நீக்கினார் என்ற நான் தானம் கொடுத்தேன். காலைப்பொழுது அமுது செய்யத் தானம் கொடுத்தேன். கல்பள்ளி மடு என்ற இடத்தில் என்குட்டை என்ற ஊரில் மூன்று கழனி நிலம் கொடுத்தேன். தேவதானமாகக் கொடுத்தேன். சந்திர சூரியர்கள் உள்ளவரை இத்தர்மம் நடக்க வேண்டும் என்பதற்காகக் கொடுத்தேன் என்பன போன்ற பல தொடர்கள் ஒன்றனுள் ஒன்று பொதிந்து கிடக்கின்றன. இவ்வாறு விரிவாக எழுதினால் கல்வெட்டுக்களுக்கு இடம் போதா என்ற காரணத்தால் பல பெயரடைகள் கொண்ட நீண்ட சொற்களை உருவாக்கி அமைத்திருக்கலாம், என்பதும் புலனாகிறது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## Statement about ownership and other particulars about Newspaer

## TAMIL POZHIL

### Form IV

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur-2 |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | Thiru M. Chandramouli, |
| | : | Proprietor, |
| | : | Gemini Printing House. |
| Nationality | | Indian |
| Address | ; | 1837/1, West Main Street, |
| | : | Thanjavur - 613 009. |
| 4. Publisher's Name | : | Thiru S. Ramanathan, |
| Nationlity | : | Indian |
| Address | : | Thiru. S. Ramanathan, Chairman, Karanthai Tamil Sangam Thanjavur - 613 002. |
| 5. Editor's Name | : | Thiru. C. Balasundaram, |
| Nationality | : | Indian |
| Address | : | 367, West Main st. |
| | : | Thanjavur - 613 009 |
| 6. Name and address of individuals who own the newspaper and partners | : | Karanthai Tamil Sangam (Regd) |
| | : | Karunthattankudi |
| | : | Thanjavur. Pin - 613 002. |

I S. Ramanthan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**S. Ramanathan,**
Publisher.

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம் நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும் இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு


## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ. | 50 00 |
| கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. | 30 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 60 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ரூ. | 6 00 |
| கபிலர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 4 00 |
| நக்கீரர் — நாவலர் ந. மு வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு. பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 75 |

### பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | | |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. | 4 50 |

விற்பனைக் கழிவு 20% உண்டு அஞ்சற் செலவு தனி

தலைவன்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தஞ்சாவூர்-613 002.

Regd. No. TN/TB/24.

நூல் அஞ்சல்

பெறுநர்

திருமிகு ஆசிரியர்.
தஞ்சை சரபோஜி மன்னர்
சரஸ்வதி மகால் நூலகம்
அரண்மனை வளாகம்
தஞ்சை - 613 001

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

2825 663

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், [illegible], தஞ்சாவூர்-613 002
அச்சிடுபவர் திரு. M. [illegible]